௵ }

ஸ்ரீ :

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF B
10 JAN 1943
MADRAS

Office of the Registrar of Books Madras

வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

விஷய ஸூசிகை.

கல்ப ஸூர்யோதயம் ... 2
2. ...ளியை மகிழ்வித்த மாபுருடன் ... 8
3. உலகப் போக்கு 14
4. பஞ்சாங்க சங்க்ரஹம் 17
5. செய்திகள் 18
6. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 20
7. வாஸந்திகா பரிணயம்

———::———

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லா தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபை... ஸங்களை அனுப்பி, அவைகளை உடனே ப... வேண்டு மென்று நியமிக்கிறார்கள். ... இருக்கிறபடியால், அவர்களுடை... நிறைவேற்ற ... பொழுது ... செய்வதா... க்ருபை...

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 7	ஸர்வஜித் வரு தை மீ	ஸஞ்சிகை 1

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

::o::

188242

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[7-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

விவேகர்.—[ஸேவித்துக்கொண்டு ஆநந்த பரிதராய்]

"கல்யாணாநாமவிகலநிதி: காபி காருண்யஸீமா
நித்யாமோதா நிகமவசஸாம் மௌளிமந்தாரமாலா ।
ஸம்பத்திவ்யா மதுவிஜயிந: ஸந்நிதத்தாம் ஸதா மே
ஸைஷா தேவீ ஸகலபுவநப்ரார்த்தநாகாமதேநு: ॥"

இது ஸ்ரீஸ்துதி ச்லோகம். ப்ரஜைகளின் ஸமஸ்த மங்களங்களுக்கும் அளவற்ற பூர்ண நிதி ஸ்ரீதேவி. பகவானை ஹிரண்ய நிதிக்கு ஒப்பிட்டது தஹர வித்யா ச்ருதி. அவள் தாயானபடியால் ப்ரஜைகளுக்கு மேல் மேல் மங்கள பரம்பரைகளைச் செய்வதிலேயே இவள் பாரிப்பு. ஸர்வேச்வரன் தன் வசமாயிருப்பதால், அவள் ஸகல மங்களங்களையும் வழங்கும் நிதி. சுரங்கத்தைப் பூமிக்குள்ளே வெகு தூரம் வெட்டி ச்ரமப்பட்டு வேண்டுவதை எடுக்கவேண்டியதில்லை. குழந்தைகளின் அபேக்ஷாமாத்ரத்தால் ஒன்றுக்குப் பலவாக வழங்கும் நிதி அவள். 'கல்யாணாநாம்' என்ற பஹுவசநத்தால் இது ஸூசிக்கப்படுகிறது. 'கல்யாணம்' என்பதற்கு, 'ஸ்வர்ணம்' 'மங்களம்' என்ற இரண்டு பொருள்களையும் கொள்ளவேணும். 'மங்களம் மங்களாநாம்' என்று ஸ்ரீ ஸ்துதி முதல் ச்லோகத்தில் உள்ளபடி, அந்த ஸ்துதியின் கடைசீ ச்லோகமாகிய இதிலும் அதையே கூறுகிறார்.

காபி காருண்யஸீமா—கருணைக்கு எல்லையாயிருப்பவள்; இவள் கருணைக்கு அந்தமில்லை.

நித்யாமோதா—நித்யமும் ப்ரஜைகள் விஷயத்தில் ஸந்தோஷமாயிருப்பவள்; 'ஆமோதம்' என்பதற்குப் 'பரிமளம்' என்றும் பொருள். இவளை 'கந்தத்வாராம்' என்று ஸ்ரீ ஸூக்தம் பாடிற்று. வேதங்களுக்கு அபூர்வ பரிமளம் உண்டென்பர். அதற்கும் இவள் த்வாரம்.

'தாம் துஷ்டுவு: ப்ரஹ்ருஷ்டாத்மாந: ஸ்ரீஸூக்தேந மஹர்ஷய:'

என்று பராசரர், தேவி அவதரித்ததும் மஹர்ஷிகள் ஸ்ரீ ஸூக்தத்தைப் பாடித் துதித்ததை வர்ணித்தார். வேதங்கள் தேவியைத் தங்கள் சிரஸ்ஸால், பாரிஜாத மாலைகளைத் தாங்குவதுபோல் தாங்குகின்றன. அம்மாலை நித்ய பரிமள

[library stamp]

முடையது. 'ஸுகந்த' என்பது வெகு தூரம் வாஸிக்கும் (தூர நிவாஸ்யாக) கந்தத்தைச் சொல்லும். 'ஸுதிநிஹஸ்ரீ' என்பது அமரம். 'நிஹாரீ' 'ஸுதூர நிர்வாஹிகந்தே' என்று அதன் உரையான ஸூக்தி. 'மஹத்தான வேத வ்ருக்ஷத்தின் கந்தம் வெகு தூரம் வீசுகின்றது' என்று ச்ருதி கூறும் நிகம பரிமளத்துக்கு த்வாரம் இவளே ப்ரிஸாதத்தால் வஹிப்பதே. 'வேரி மாருத' என்பதற்கு, 'நிதாகஜோதா' என்பது ஸம்ஸ்க்ருத மொழி பெயர்ப்பாகும். திருவாய்மொழி தன் நாமத்திலேயே திருவை வஹிக்கிறது. மூவுலகிற்கும் உபகாரங்கள் முதலடியிற் கூறப்பட்டன. வேத முடிகளுக்கு சோபையும் மணமும் தரும் உபகாரம் இரண்டாம் அடியிற் கூறப்பட்டது. வேதங்களுக்குக் கண்ணான பகவானுக்கும் திவ்யமான ஸம்பத்தென்று மூன்றும் அடியிற் கூறுகிறார்.

'வக்ஷ: ஸ்ரீம் ஜயவிஜயிநோ ஹஸ்யந்தீம் ஸ்வகாந்த்யா' என்று முதல் ச்லோகத்திற் கூறியபடியே இங்கே முடிவிலும் 'ஜயவிஜயிந:' என்று பாடுகிறார். தொடக்கம்போல் முடிவிலும் இருப்பது ரஸமென்பர். 'இப்படி மஹிமை பொருந்திய தேவி எனக்கு நித்யமும் ஸந்நிஹிதமாய் அருகில் என் கண் முன் நிற்க வேணும்' என்கிறார். ஸ்தோத்ரத்தை முடிக்கையில் 'ஸந்நிதத்தாம் ஸதா மே' என்று ப்ரார்த்தித்தவுடனே உத்தர க்ஷணத்தில் ஸேவை ஸாதிப்பதை அநுபவித்து 'ஸைஷா தேவீ' [அந்தந் தேவி இதோ எதிரில் ஸேவை ஸாதிக்கிறாள்] என்று ஸ்தோத்ர முடிவில் பாடுகிறார்.

அம்ருத மதந ஸமயத்தில் தேவி அவதரித்தபோது தேவர்கள் துதிக்கையில் அவர்கள் கண் முன்பு அவள் எப்படி ஸாக்ஷாத்தாக ஸேவை ஸாதித்தாளோ, அப்படியே இத்துதியால் மகிழ்ந்து என் பக்தியில் ரஸித்து என் முன் நிற்கிறாள். ஸ்ரீ மஹா லக்ஷ்மி பாற்கடலில் அமுதம் கடைகையில் அவதரித்தது, பகவானுக்கெதிரில் அவளுக்கு அபிஷேகம் நடந்தது முதலியவை ஸ்ரீ ஸ்துதியிலும் விஸ்தாரமாக வர்ணிக்கப் பட்டுள்ளன. ஸகல புவநங்களின் எல்லா ப்ரார்த்தனைகளையும் சுரக்கும் காமதேநு இவள். தாயான படியால் தேநுவைப்போல் வத்ஸலையாய்ச் சுரப்பவள். 'சுரக்கும் சுரபிகள்போல்' என்று ஸ்ரீ தேவியின் அபிமானான ஆசார்யருக்குப் இந்த ஸ்வபாவம் உண்டென்பது காட்டப்பட்டது. மந்தாரம் எனும் பாரிஜாதம். உதாரனை பகவானுக்கும் உதார குண ஸம்பத்தை வழங்கும் வள்ளல் இவள். 'உதாரா:,' 'காமயே ந:' என்றிப்படி அநுபவ பரம்பரை ரஸ்யம். பாரிஜாதமும் காமதேநுவும் மோக்ஷ ஸம்பத்தை அளிக்க சக்தமல்ல. இந்தக் காமதேநு ஸகல ப்ரார்த்திதங்களையும் தருவது.

[அஞ்ஜலிபந்தத்துடன்]

"ஸைஷா தேவீ த்ரிஜகதவநோத்பாதகல்பாந்தகல்பே
ஸங்கல்பாம் பரிதகிஞ்சிதாம் ஸம்பதாம் வாரிதாம் |
யஸ்யோஹ்லேக்ஷணதயபூஷ்ஜா யாசிதா பஸ்சாம்
விதீக்ஷதே விதூதமஸி வமே வாஸவைதேவஸ்ய யந்த்ரா: ||"

இதுவும் ஸ்ரீஸ்துதி ச்லோகம். 'அஞ்ஜலி செய்துகொண்டு' என்பதால், 'கலௌ ஜகதம் ஜம்பதும் வஹதே விதீயத' என்ற பட்டர் ச்லோகத்தை ஸூசிக்

கிறார். அந்த ச்லோகம், ஸ்ரீ ஸூக்தத்தில் 'உதாராம்' என்று வர்ணித்திருப் பதன் பொருளை விளக்குவதாக ஸ்வாமி ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸாதிக்கிறார்.

'ஸேவே' [ஸேவிக்கிறேன்] என்று இந்த ச்லோகத்தைத் தொடங்கு கிறார். 'ஸுபிவாதயே' என்று தொடங்கி மாதாவை அபிவாதநம் செய்கிறார். பத்மையின் பாதபத்மத்தை ஸேவிக்கிறார். அதன் ப்ரபாவத்தை வர்ணிக்கிறாரே யொழிய ஒன்றையும் தரும்படி ப்ரார்த்திக்கவில்லை. இது விவேக லக்ஷணம். வேதங்கள் தங்கள் சிரஸுகளால் பூஜித்து மாலையாகத் தரிப்பதை முன்பு பாடி னார். இங்கே தேவர்களும் அவர்கள் தேவிமார்களுமாகக் கூடித் தங்கள் தாமரை முகங்களை ஒரு மாலைபோல் தேவியின் தாமரைத் திருவடியில் ஸமர்ப் பித்து அர்ச்சிப்பதைப் பாடுகிறார்.

" பத்மாஸநாம் பத்மகராம் பத்மபத்ர நிபேக்ஷணாம் ।
வந்தே பத்மமுகீம் தேவீம் பத்மநாபப்ரியாமஹம் ॥ "

என்று இந்த்ரன், தன் ஸ்தோத்ரத்தின் இரண்டாம் ச்லோகத்தில் தேவியின் திரு மேனி பத்மமயம் என்று பாடினான். முதல் ச்லோகத்தில் 'ஜநஸம்பவாம்' என்று பாடினான். 'நமஸ்யே' என்று துதியைத் தொடங்கினான். 'ப்ரஸீத தேவி பத்மாக்ஷி' என்று முடிவு ச்லோகத்தில் பாடினான். அவன் பத்மமயமாய்த் துதித்ததையும், 'பாதபத்மம்' என்று அவன் துதிக்க மறந்ததையும், 'ஸேவே பாதபத்மம்' என்பதால் ஸ்வாமி ஸூசிக்கும் அழகு ரஸிக்கத்தக்கது.

" த்வயா தேவி பரித்யக்தம் ஸகலம் புவநத்ரயம் ।
விநஷ்டப்ராயமபவத் த்வயேதாநீம் ஸமேதிதம் ॥ "

என்று இந்த்ரன் துதித்ததையே அநுஸரித்து ஆளவந்தார்,

" ஈஷத்த்வத் கருணாநிரீக்ஷணஸுதா ஸந்துக்ஷணாத் ரக்ஷ்யதே ।
நஷ்டம் ப்ராக்ததலாபதஸ்த்ரிபுவநம் ஸம்ப்ரத்யநந்தோதயம் ॥ "

என்று சதுச்லோகியில் பாடினார். தேவியின் அவதார ஸமயத்தில் தேவேந்த்ரன் பாடியது இந்த ஸ்தோத்ரம்; இது பராசரரால் புராணரத்நத்தில் படிக்கப்பட் டுள்ளது. 'பத்ம நிதி' 'சங்கநிதி' என்று பாடுவர். பத்மம் என்பது நிதி; திருவடியே நிதியாகும். இது ஸகல ஸம்பத்துக்களுக்கும் நிதியாகவும், ஸித்திக் கும் க்ஷேத்ரமாகவும் ஆகும். நிதி க்ஷேத்ரத்தில் இருக்கும். 'த்வம் ஸித்தி:' என்பது இந்த்ரன் ஸ்துதி. இந்த ஸம்பத்துக்களுக்கு இனி விபத் (அபாயம்) கிடையாது. முன்பு துர்வாஸரின் சாபத்தால் தன் ஸம்பத்துக்கு அபாயம் வந்ததையிட்டு, 'இனி த்ரைலோக்யத்தையும் கைவிடாமலிருக்கும்படி வரம் தர வேண்டு' மென்று இந்த்ரன் ப்ரார்த்திக்க,

" த்ரைலோக்யம் த்ரிதசச்ரேஷ்ட ந ஸந்த்யக்ஷ்யாமி வாஸவ "

என்று தேவி அப்படியே வர மளித்ததையும் 'ஶசிதவிவஷாம் ஸம்வஷாழ' என்பதால் ஸூசிக்கிருர். நிரபாயமான ஸம்பத்துக்களைத் தரும் பத்ம நிதி. இங்கே மோக்ஷம் தவிர மற்ற ஸம்பத்துக்கள் கூறப்பட்டன. பின் பாதியில் மோக்ஷ ஸம்பத்தின் ஸித்தியைப் பாடுகிருர்.

'யஸ்ரீநாதவஷெ'—எந்தத் திருவடித் தாமரையில். 'க்ஷம்விஶ-கீஹவஷாயி நீ' என்று இந்திரன் பாடினுன். அவன் மோக்ஷத்தை ப்ரார்த்திக்கவில்லை. அம்ருதத்தை அடைவதற்காகப் படாத பாடுகள் பட்டான். இப்பொழுது தேவி இருப்பது பகவான் திருமார்பில், முத்தி தருவது பகவத் ஸங்கல்பம். அது ஹ்ருதயத்தில் உதிப்பது. முத்திதரும் பீடத்தில் அவள் வீற்றிருக்கிருள்.

ஶஶஷஹுஶதஶிரஸாழ—கொஞ்சம் வணங்கினல் போதும்; ஸாஷ்டாங்க ப்ரணுமமும் வேண்டியதில்லை; பூமியில் ஶிரஸ்ஸு படிய வேண்டியதில்லை. கைகூப்பான அஞ்ஜலியையே குழந்தைக்குச் சுமையாக நினைப்பவள்.

யாவயிஷா ஶரீரழ—ஶரீர யாத்ரையையும் அவன் கடாக்ஷத்தால் பேரின்பத்துடன் செல்லவிட்டு. யநூா:—உத்தம தநமான மோக்ஷச் செல்வ லாபத்தைப் பெற்று.

வாஸுஷெவஸூ விதஶவி வஷெ—இவள் பத பத்மத்தில் வணங்கியதற்குப் பரவாஸுதேவ பரம பதத்தில் நித்யவாஸ பாக்யம்.

வதிஷூஜெ—இதில் மிக்க ரஸமுண்டு. வர்த்திப்பர்; நித்யமும் இருப்பர்; ஆவர்த்திக்க மாட்டார். 'வதிஷூஜெ' என்பதால், கீழே ஆவர்த்தந மில்லாமை வ்யஞ்ஜித மாகிறது.

வாதவஷழ—இதில் மற்ருெரு ரஸமுண்டு. இந்த்ரன்,

"கா க்வநூா க்வாஶூதெ ஜெவி ஸவயஜூயம் வவு:।
கயஷூாஷெ ஜெவஜெவஷூ யொகிவிஷூம் மஶாஹர த:॥

[அம்மா! தேவீ! யஜ்ஞங்களாலும் யஜ்ஞாவயவங்களாலும் நிரம்பிய யஜ்ஞ புருஷனுகிய தேவ தேவனுன பகவானுடைய யோகித்யேயமான திருமேனியின் பேரில் உன்னைத் தவிர யார் தான் பாதம் படும்படி வீற்றிருக்கக் கூடும்?] என்று வியந்தான். ஒரு யாகத்துக் கென்று படி அமைத்து, அதில் கோலம் போட்டுவிட்டால் அதை யாராவது மிதிப்பரோ? 'பகவான் யஜ்ஞ வடிவு; அவன் ஶரீராவயவங்க ளெல்லாம் யாகாவயவங்கள். அவன் திருமார்பில் உன் பாதம் படுகின்றதே' என்பது அவன் வியப்பிற்குக் காரணம். 'வாதவஷழ' என்பதால் அதற்குப் பரிஹாரத்தை ஸூசிக்கிருர். அவள் திருவடி தாமரை புஷ்ப மல்லவோ! தாமரைப் புஷ்பங்களைக் கோலப்படியில் வைப்பது அழகே; திருமார்புக்கும் அழகே என்று ரஸம்.

" ஶஹெஶாதிஸுஶவஜ: ஸதயித ஹூாஸதாவீமணு:।"

என்று ஆளவந்தார் ஸ்தோத்ரத்தில் போல், இங்கும் த்ரிதஶர்களான தேவர்களும் அவர்கள் தேவிமாராகிய தேவ தேவி கணங்களும், தங்கள் முடிகளால் வணங்கும் பாதபத்மம் என்றும் பொருள் கொள்ளலாம்.

வ்யவஸாயன்:—'தேவர்கள், பக்ஷிகள், ம்ருகங்கள், மநுஷ்யர் ஆகிய பல் யோநிகளிலும் ஆணென்று பேர் படைத்தவரெல்லாம் பகவான் ஹரியும், பெண்ணென்று பேர் படைத்தவ ரெல்லாம் லக்ஷ்மீ தேவியுமாவர்; இவ்விருவருக்கும் மேற்பட்ட வஸ்து வில்லை' என்று பாராஶரர் புராணத்திற் கூறினர்.

[" தேவதிர்யங்மநுஷ்யேஷு பும்நாமா பகவாந் ஹரி: ।
ஸ்த்ரீநாம்நீ ஸ்ரீஶ்ச விஜ்ஞேயா நாநயோர்வித்யதே பரம் ॥ "

என்ற பராஶரர் ச்லோகம் இங்கே அப்படியே வ்யவஸாயனால் படிக்கப் பட்டது.]

விவேகன்:—ஸேநாபதியே! இவ்விருவருடைய ஆட்சிக் குட்பட்ட விபூதியாகிய ஜகத் ஆணும் பெண்ணுமாக இருவகைப்பட்டிருக்கிறது.

வ்யவஸாயர்:—

" ஸாயாநேணைவ ஸர்வம் விஷ்ணுநா சைவ
தேவ்யா வ்யாப்தம் யதிதம் த்ருஶ்யதே ।
அம்பா ஸா ஜகதாம் த்வம் ஹி பிதா ஜநார்தந: ।
த்வயா ஏதத் வ்யாப்தம் ஸர்வம் ஜகத் ॥ "

[விஷ்ணுபுராணம் 1-வது அம்சம், 9-ம் அத்.]

[தாயே! உன்னாலும் விஷ்ணுவாலும் சராசரமான இந்த உலகமெல்லாம் வ்யாபிக்கப்பட் டிருக்கிறது. நீ ஸர்வ லோகத்திற்கும் மாதா; தேவதேவனான ஹரி பிதா] என்று இத் தம்பதிகளால் விச்வம் முழுதும் வ்யாபிக்கப்பட் டிருக்கிறதை இந்த்ரன் கூறினான். 8-வது அத்யாயத்தில் பராஶரர் 'எப்படி விஷ்ணு ஸர்வத்ர வ்யாபித்துள்ளவரோ அப்படியே இவளும்' என்று கூறி, 'இந்த்ராணி முதலிய பெண்களெல்லாம் அவள் ரூபம் (விபூதி); இந்த்ரன் முதலிய ஆண்கள் அவர் ரூபம்' என்று விஸ்தாரமாகப் பேசி, அத்யாய முடிவில், 'தேவதிர்யங்மநுஷ்யேஷு' என்ற ச்லோகத்தை முடிவில் கூறினர். அந்த ச்லோகத்தை இங்கே வ்யவஸாயன் முகமாக ஸ்வாமி படித்தார். இந்த ச்லோகத்தில் வ்யவஸாயன், "உங்கள் இருவருக்கும் விச்வம் முழுதும் பொதுவில் ஸொந்தம் தான். எல்லா விபூதிகளும் இருவருக்கும் ஸொந்தமே. உங்கள் இச்சையால் நீங்கள் ஒன்றொன்றில் விஶேஷாபிமாநம் செய்கிறீர்கள். உங்கள் இச்சையால் அப்படி அபிமதிப்பது. ஆண் பெண் உலக முழுவதும் உங்கள் இருவர்க்கும் ஶேஷமே. எல்லோரும் உங்கள் இருவரையும் பஜநம் செய்யவேண்டியதே. உங்கள்

இருவருடைய தயையினுல்தான் ஆணே பெண்ணே உஜ்ஜீவிக்க முடியும். ஆண்களுக்கு ஒரு ஆண்தைவம், பெண்களுக்கு ஒரு பெண்தைவம் என்கிற பிரிவு கிடையாது. இங்குமில்லை; அங்குமில்லை '' என்று கூறுகிறன்.

''ஸவஹஸ்ராஹயா கசெவவி தத்ர தத்ர ஹிசவ்யா திஸயவிஸெஷாஉய வாணத்ரீ நாம் தததா ககசவச தழ ''

என்பது ஸ்ரீ விஷ்ணு சித்தர் உரை. இதைஇங்கே ஸ்ரீஸ்வாமி தெளிவிக்கிருர். தம்பதிகள் இருவரையும் வேத ஸிரஸுகளான வேதாந்தங்கள் தாங்கி உலகத்துக்கு ப்ரகாஸமாய்க் காட்டுகின்றன. எல்லார்க்கும் இருவர் தயையும் வேண்டும்.

ராமாயணம் அயோத்யா காண்டம் 48-ம் ஸர்க்கத்தில், அயோத்யா நகரப் பெண்கள், தங்கள் பர்த்தாக்கள் ராமனைவிட்டுத் திரும்பி வந்ததைப் பற்றி வருத்தத்துடன் பேசுகையில்,

'' வயம் வரிசரிஷ்யாமஃ ஸீதாம் யத்ர ச ராகவம் ।
யஷாகம் ராகவொரணெ்ய யொகக்ஷெமம் விதாஸ்யதி ॥
ஸீதா நாரீஜநஸ்யாஸ்ய யொகக்ஷெமம் கரிஷ்யதி । ''

என்று பேசிய ஔசித்ய ரஸம் இது.

ஸ்ரீ பாகவத விஷ்ணு புராணுதி க்ரந்தங்கள் ஸ்வாமிக்கு முகஸ்தமாயிருந்ததால், ஸுகாதிகள் ச்லோகங்கள் ப்ராயண அப்படியே ஸ்வாமி கவநங்களில் அமைகின்றன. மேலே உதாஹரிக்கப்பட்ட 'சவ்யாஸஹஉவ நத்ரீம்' என்ற கூர்மாவதார ச்லோகத்திற்கும் அந்த அவதார விஷயமாக அடியிற் குறிக்கப்பட்ட ஸ்ரீ பாகவதம் 12-வது ஸ்கந்தம் கடைசீ அத்யாய ச்லோகத்திற்கு முள்ள ஒற்றுமை கவனிக்கத்தக்கது.

'' வரஷெ ஹாஸ்யஉஊஉநா கிரிக்ராவாக்ரகணடியநா
ஞிர்ராஹொ: கமடாகரதெஹஉமவதஃ ஸ்வாஸாநிலாஃ வாநஃ ।
யத்ஸம்ஸாரகலாநுவதஉநவஸாஸெவலாநி ஹெநாம்ஹஸாம்
யாதாயாதமதம் த்ரிதம் ஜல நிஜெநஉாஉயாவி விஸ்ராம்யதி ॥ ''

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மாணியை மகிழ்வித்த மாபுருடன்

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ஸ்ரீ. உப. ரே. திருமலை அய்யங்கார், தமிழ் வித்வான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

பாவளருந் தமிழ் நாட்டில் சான்றோர் வதியும் தொண்டைமண்டலத் துக்குத் திலதமா யுள்ளது கார்மேனி யருளாளர் கச்சித் திருப்பதி. இதற்கு அருகில் 'தூப்புல்' என்ற அக்ரஹாரம் உளது. இது மிகவும் தொன்மை யானது; புனிதமானது. தூய தென்மறை வல்லவர் வாழ்விட மிது. 'திருத் தண்கா' என்றும், 'ஹிமோபவநம்' என்றும் இதனையே ப்ரபல புராணங்கள் கூறும். திருக்குருகூரில் அவதரித்த நம்மாழ்வார், தாம் அருளிச்செய்த 'திரு விருத்தம்' என்ற ஆதி ப்ரபந்தத்தில் இதனை 'அம்பூந் தேனிளஞ் சோலை' என்று கொண்டாடியுள்ளார். ஒரு மாபுருடன் ஆங்கு அவதரிக்கப் போவதை யும் குறித்துள்ளார் நம் சடகோபன். அவ்வாழ்வார் திருவருளுக் கிலக்காகிய வள்ளல், இற்றைக்குச் சுமார் எழுநூறு ஆண்டுகட்கு முன்னர் இத்தூப்புலில் வேதியர் தவப் பயனாய், செந்தமிழ்ச் செல்வராய் அவதரித்தார். இவரது திரு நாமம் திருவேங்கடநாதன். கன்னித் திருவோணத்தில் இம்மஹிதலம் வந் துதித்த உத்தமரே இவர். இருபது வயதிற்குள்ளே ஸகல கலைகளையும் பயின்று தமக்குவமை யில்லாதவராய்த் திகழ்ந்திருந்தார் இத்தீர்த்தர். இவரது ஞானம் அநுட்டானம் ஒழுக்கம் வைராக்யம் முதலியன ஒப்புயர்வற்றன. "செந்தமிழு மாரியமுந் தேர்ந்தபொதுத் தேசிகனே! எவ்விதச் சித்து மியற்றவல்லாய்" என்று ஸ்ரீ-ல-ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமிகள் போற்றும் பெற்றியராயின் இவரது பெருமையைப் பேசிடவல்லார் யாரே? தெளிவும் பொறுமைச்சீரும் வேங்கட நாத னெனும் ஸ்ரீ வேதாந்த தேசிகனின் சிறந்த அணிகலன்களா யமைந்து, அழகுக் கழகு செய்வன வாயின. உயர்ந்தோர் அனைவரும் இவரைத் தெய்வத் தினு முயர்ந்தவராகக் கருதி வழிபடுவா ராயினர். முக்குணங்கள் நடமாடும் வையக மாகலின், அம்மாபுருடனிடம் அஸூயை யுற்றவர்களும் அக்காலத்து இல்லாம லில்லை. பிற ராக்கம் பொறுமையே அழுக்காறு. இம்மாபுருடனிடம் அழுக்காறு கொண்டவர்களும் ஆநந்த மெய்தினர். இவ்வதிசயத்தைச் சற்றுக் கேண்மின்.

தூப்புல் மெய்த்தவனும் வேதாந்த வாசிரியன் தமது திருமாளிகையில் எழுந்தருளியிருக்கிறார். உயர்ந்த ஆஸநம்; பன்னிரு நாமத்துடன் துலங்கும் திருமேனி; வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையும் தேசு; தூமுறுவல் கொண்ட திருமுகமண்டலம்; வ்யாக்யா முத்திரைக் கை; மார்பை அலங்கரிக்கும் திருமணித் தாழ்வடங்கள்; முப்புரி நூல். தூப்புற் குலமணியின் தோற்றம் இத்தகைமைத்து. நாற்புறமும் இவரது துணையடிகளைச் சிந்தித்து வந்திக்கும் அன்பரீட்டம். காலக்ஷேபம் நடைபெறுகிறது.

"வேதோபப்ரம்ஹணார்த்தமாக ப்ரவ்ருத்தங்களான புராணங்களில் ஸங்கீர்ண ராஜஸ தாமஸ புராணங்களுக்குக் காரண தோஷமும் பாதக ப்ரத்யயமும் உண்டானபடியாலே இவற்றை ஆசரிக்குமவர்கள்

"இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும்
மலிந்து வாது செய்வீர்களும்"

என்று வேதபாஹ்ய கோடியிலே கோப்புண்டார்கள். ஸாத்விக புராணங்களுக்குக் காரண தோஷமும் பாதக ப்ரத்யயமும் இல்லாதபடியாலும் வைதிக பரிக்ரஹ ப்ராசுர்யத்தாலும் இவையே உபப்ருஹ்மணங்களில் உபாதேயதமங்கள்.

"பாசிதூர்த் துக்கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசி யிருப்பனகள் பேர்க்கவும் பேராவே"

என்கிறபடியே ஒன்றாலும் சலிப்பிக்க வொண்ணாதபடி தத்வ ஹித புருஷார்த்தங்களில் ஸுப்ரதிஷ்டிதமா யிருக்கும். இதற்கு வக்த்ரு வைலக்ஷண்யத்தாலும் ச்ரோத்ரு வைலக்ஷண்யத்தாலும் அதிசயம் உண்டு. வக்த்ரு வைலக்ஷண்யம் எதென்னில், இதற்கு வக்தாவான ஞானப்பிரான் ப்ரம விப்ரலம்ப ப்ரமாதா சக்தி ஸம்பாவனையையுடைய க்ஷேத்ரஜ்ஞரைப்போலன்றிக்கே, ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனாகையாலே இவனுக்கு ப்ரமும் ப்ரமாதமும் கூடாது; ப்ரத்யுபகாராநிரபேக்ஷ பரமகாருணிகனாகையாலே ஆச்ரிதர் திறத்தில் இவனுக்கு விப்ரலம்பகத்வம் கூடியாது; "𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍃𑌕𑍍 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑌰𑍍𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍" இத்யாதிகளிற்படியே ஸர்வசக்தியாகையாலே இவனுக்கு அசக்தி ப்ரஸங்கமும் இல்லை."

"இவ்வவதாரத்திற்கு இவன் தன்னுடைய அவஸ்தாந்தரங்களிற் காட்டில் ஏற்றமுண்டு. எங்ஙனேயென்னில்: இவ்வவதாரம் ஒரு வழியாலே கரை ஏறினவர்களைக் கூட்டிக்கொண்டு இருக்கிறவளவேயான் பரரூபம் போலன்றிக்கே, அழுந்தினவர்களைக் கரையாதபடி எடுத்துக் கரையேற விடும்படியாயிருக்கும். வ்யூஹங்களைப்போல பக்தரானவர்கள் ஆச்ரயிக்க மேலான நிலத்தில் இருக்கை யன்றிக்கே, 'பார்வண்ண மடமங்கை பத்தர்' என்கிறபடியே ஆச்ரிதர் பக்கல் தன் பக்தி தோன்ற 'கேழலாய்க் கீழ்ப்புக்கு இடந்திடும்' என்கிறபடியே அவர்கள் இருந்த கீழ் நிலத்திலும் சென்றும், 'தடம் பெருந்தோளாரத் தழுவும்' என்னும்படியா யிருக்கும். மத்ஸ்யாவதாரம் போலே தான் பெற்ற ப்ரஜைகள் உலாவித் திரியுமளவிலே ஈக்ஷண மாத்ரத்தாலே ரக்ஷிக்குமளவன்றிக்கே, இங்கே ப்ரஜைகள் நினைக்கவும் மாட்டாதே காஷ்ட பாஷாண ஸந்நிபனாய் விழுந்து கிடக்கிற வளவிலே அவர்களுக்கு அடைத்த நினைவைத் தான் அநுஷ்டித்து ரக்ஷிக்கிறான் என்னும்படிக்குத் தன் பாசுரமே யுண்டு. கூர்மாவதாரம்போலே ஒரு பூதரம் ப்ரமிக்கைக்கு அதிஷ்டானமாய் நிற்கை

யன்றிக்கே, இதுதான் ஆதாரமுமாய் பூமியும் பூசரங்களும் கலங்காதே 'ஊன்றி யிடந்து எயிற்றில் கொண்டவன்று தானத்தவே' என்னும்படி நிலைநிற்கப்பண்ணுமதாயிருந்தது. ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரம் போலே தட்டுப்பட்ட தொன்றையும் பிளக்குமதன்றிக்கே, இது பூமியெல்லாம் தட்டுப்படாதபடி 'அத்ருப்ஹ்து' என்கிறபடியே இறுகப்பண்ணுமதாயிருந்தது. ஸ்ரீ வாமநாவதாரம் போலே 'பொல்லாக் குறளுருவாய்ப் பொற்கையில் நீரேற்று' என்றபடி தன்னுடைய பூமியைப் பிறர்க்குக் கொடுக்கக் கொள்ளுகை யன்றிக்கே, இது மஹாபலியான அஸுரனை நிராகரித்துத் தன் பூமியைத் தானே கைக்கொண்ட அவதாரமாயிருக்கும். விரோதி நிராகரணத்திற்கு மழு எந்தவேண்டும் பரசுராமாவதாரத்தில்போலன்றிக்கே, இவ்வவதாரத்தில் விரோதி நிராகரணத்திற்குப் பூமிதானே ஸாக்ஷியாம்படி இருந்தது. ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனார் அவதாரம்போலே பூமியிலுள்ள சராசரங்களைத் தன் பதத்திலே ஏற்றுமளவன்றிக்கே, இது பூமிதன்னைத் தோளிலே ஏற்றும் அவதாரமாயிருந்தது. பலபத்ராவதாரம்போலே பூமிக்கு க்ஷதியைப் பண்ணுவதொரு வங்கேறியான உபகரணத்தைக் கையிலே கொண்டிருக்கை யன்றிக்கே, இது பூமிக்கு க்ஷதி வாராதபடி எடுக்கும் ஸஹஜமான முக்யோபகரணத்தை உடைத்தாயிருக்கும். 'ஶிஷ்யஸ்தேஹம் ஶாதிமாம் த்வாம் ப்ரபந்நம்' என்றவனுக்கு உபதேசிக்கத் தொடங்கி, கர்மயோகாதிகளிலே அதிகரித்துக் கடையாயிருப்பதொரு ச்லோகத்திலே பரமஹிதத்தைக் காட்டின க்ருஷ்ணாவதாரம்போலன்றிக்கே, இது, 'அஹம் ஶிஷ்யா ச தாஸீ ச பக்தா ச த்வயி மாதவ' என்றார்க்கு முழுகி மண்கொண்டு உபதேசிக்கும்படியாயிருந்தது. 'கற்கியா மின்னம்' என்னும்படி பாவ்யுபகாரகமான கல்க்யவதாரம் போலன்றிக்கே, இது பூதோபகார முண்டான அவதாரமாயிருந்தது. ஆகையால் இப்புராண ப்ரவர்த்தகமான இவ்வவதாரத்திற்கு ஸமானமில்லாதாற்போல உபமானமும் இல்லை. இவ்வவதாரத்தை மந்வாதி பரமாப்த பரிகணனையிலே தர்மசாஸ்த்ர ப்ரவர்த்தகர்கள் தாங்களே சேர்த்தார்கள்."

"இப்படி வக்த்ரு வைலக்ஷண்யத்தாலே இப்புராணம் உத்க்ருஷ்டம். ச்ரோத்ரு வைலக்ஷண்யத்தாலும் இது ஸர்வோத்க்ருஷ்டம்; எங்ஙனே யென்னில்: ஸ்ரீ பூமிப் பிராட்டியை ஜகத்திற்கு 'ஈஶாநா' என்று ச்ருதி சொல்லுகையாலே சேதநாசேதந ரூபமான ஜகத்திற்காட்டில் இவளுடைய உத்கர்ஷம் ப்ரஸித்தம்.

ஸர்வ ஸஹையான இவளுக்கு ஸர்வேச்வரனைக் காட்டிலும் பெரிய பிராட்டியாரைக் காட்டிலும் க்ஷமாதிகுண பூயஸ்தை உண்டாயிருந்தது. இப்படியானால் இவளுக்குத் தங்களைக் காட்டில் ஏற்றத்தை ஸூரிகள் தாங்களே அறிவார்கள். ஆகையால் கர்மவச்ய ரானவர்கள் ஸ்வகார்யார்த்தமாகக் கேட்க, உறவில்லாத க்ஷேத்ரஜ்ஞர் உபதேசிக்க ப்ரவ்ருத்தங்களான புராணாந்தரங்கள்போலன்றிக்கே, ஸர்வ லோக ஜநநியான இவள் ஜகத்திதார்த்தமாகக் கேட்க 'பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய' என்கிறபடியே ஸர்வலோக பிதா

வானவன் அருளிச்செய்ய ப்ரவ்ருத்தமான புராண மாகையாலே இது எல்லா வற்றிலும் அதிகம்."

இவ்வமுத மொழிகளைச் செவிமடுத்து அமிழ்தின் மாந்தி இன்புறுகின்றனர் அங்குற்ற அடியார்கள். அவ்வமயம் ஒரு மாணி (பிரமசாரி) அங்கு வருகின்ருன்.

" முப்புரி நூலினன் முஞ்சியன் விஞ்சை
கற்பதோர் நாவன் அனற்படு கையன்"

ஆகத் திகழும் அம்மாணி விழுவதும் தொழுவதுமாக நிற்கின்ருன். ஸ்வாமி அவனைக் குளிரக் கடாக்ஷித்து 'நீ யாவன்?' என அன்போடு வினவுகின்ருர்.

பிரமசாரி:—மறைமுடி யண்ணலே! அடியேன் ஓர் அந்தணச் சிறுவன். வேத விதிப்படி உபநயநஞ் செய்யப்பெற்றுக் குருகுல வாஸம் செய்து வித்யைகளை அதிகரித்து அவ்வப்யாஸம் பூர்த்தியாய்விட்டது. எனது குலத்துக்குரிய ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு இல்லற தர்மத்தை நடத்த இச்சிக்கிறேன். யானே பரம ஏழை. எனது விருப்பத்தை முற்றுவிக்கப் போதிய ஆதரவு அளிக்கவேண்டும் ஆரியசிகாமணியே!

ஸ்வாமி:—(ஆச்சரியத்தோடு) நல்லது; உனக்கு வேண்டுவது த்ரவ்யம்; செல்வர்களிடம் செல்லாது இங்குற்ற காரணம் என்னை?

பிரம:—வேதாந்த வாரிய! அடியேன் இந்தத் திவ்ய தேசத்திற்குப் புதிது. சிறிது நேரத்துக்குமுன் இவ்வக்ரஹாரக் கோடியில் எழுந்தருளியிருந்த சில ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் என்னுடைய அபீஷ்டத்தை அறிவித்தேன். அவர்கள் ஸ்வாமியிடம் விண்ணப்பித்தால் வேண்டிய உதவி யளிப்பார் என்றனர். அதன் பேரில் இங்கு வந்தனன். பிழை யிருப்பின் பொறுத்தருள்க.

ஸ்வாமி:—அப்படியா? பாகவதோத்தமர்கள் அப்படி அடியேனைக் கொண்டு உமக்கு த்ரவ்யம் சேர்ப்பிக்கவேண்டு மென்று திருவுள்ளம் பற்றினர்களேயாகில் அதற்கு இடையூறு யாதுளது? பகவத் ஸங்கல்பம் விஞகலாம்; பாகவதாநுக்ரஹம் பலித்தே தீரும். பீஷ்மரது ப்ரதிஜ்ஞையைக் காப்பாற்றுவதற்காகப் பரமன் வேதம் போன்ற தன் வார்த்தையையும் பொய்யாக்கினனல்லவா? இங்ஙனே நீவிர் இரும். [சிஷ்ய வர்க்கங்களைக் கடாக்ஷித்து] இப்பொழுது நடக்கப்போவதைச் சற்றுக் கவனியுங்கள்.

" யொ ஙாஸஂஹகுஙி தஉ நவொ ய-ஷெ காஞ்யக்ஷஂ
யஉ-உஂ ஞாத்ஷஂ ஞுயஉஙிஹ யெ யாஸயஜெ ய நாயாஃ।
தெஷாஂ ஹஷெய-உ நவ திஙுஹாஉஂபஸாஉஂப-[illegible] நாஃ
யாஸா நிய-உாஞ்யிகஉயிகஂ வாஂஅிதா நாஂ வஷ[illegible] நாஃ ॥ "

18924 2

["தம்பதி யென்ற நீவிர் தம்பதி யென்றே தேறும்
தம்பெருந் தருமம் காக்கத் தமர்களே கருதும் செல்வம்
அம்புவி யளகை யாழி யம்பரம் யாவு மொன்றிப்
பம்பியே செல்வ வெள்ளம் கருத்தையும் கடந்து பெய்யும்"]

என்ற ச்லோகத்தை அநுஸந்திக்கிறார் ஸ்வாமி. அபரிமிதமான தநராசிகள் ஸ்வாமி திரு முன்பே குவிகின்றன. [உடனே மாணியை நோக்கி] 'இவற்றை எடுத்துக் கொள்ளும்' என்கிறார்.

பிரம:—[ஸ்வாமியின் கடாக்ஷத்தினால் பரிசுத்த மனதையுடையனாகி] வள்ளலாரே! எனக்கு இது போதும்; [தனக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்டு விடைதந்தருள்க எனப் புறப்பட யத்தனிக்கிறான்.]

ஸ்வாமி:—மாணியே! உம்மை உத்தேசித்தே இந்த த்ரவியம் வரவழைக்கப்பட்டது. மிகுதி வைக்காமல் இது முழுவதையும் எடுத்துக்கொண்டு செல்லும்.

பிரம:—க்ருபா மூர்த்தியே! அடியேன் தேவரீரை எனது விவாஹத்திற்காக த்ரவ்யம் யாசித்தேன். தேவரீரும் அருளிற்று. அருளின இந்த த்ரவ்யம் போதும் இதற்குமேல் அடியேற்குத் தேவையில்லையே.

இங்ஙனம் இது நிகழாநிற்க, பிரமசாரியை ஸ்வாமியிடம் அனுப்பிய மஹாநுபாவர்கள், 'ஸ்வாமியிடமோ பணம் கிடையாது; ஒரு காசு கூட இல்லையே யென வருந்துவர்; பரிபவத்தைப் பார்ப்போம்' என இங்கு வருகின்றனர். முன் காலத்தில் ரகு மன்னனுக்கும் கௌத்ஸ மஹரிஷிக்கும் நடந்த ஸம்வாதத்தை நினைப்பூட்டுகின்றது இங்குற்ற நிலை. அவர்கள் பரவசமடைகின்றனர்.

ஸ்வாமி:—[அவர்களை நோக்கி] தேவரீர்களுடைய நியமநத்தினால் அடியேன் இம்மாணிக்கு உதவி செய்யும் பாக்யம் பெற்றேன். மிகுதியான த்ரவ்யம் தமக்கு வேண்டியதில்லை என்கிறார் அவர். அடியேனுக்கும் அது தேவையில்லை. தேவரீர்களாகினும் இவற்றைத் திருவுள்ளம்பற்றி யருளவேண்டும்.

ஸ்வாமியின் அபார சக்தியையும் ஆச்சர்யமான வைராக்யத்தையும் தங்களது அழுக்காற்றையும் எண்ணி யெண்ணி, தங்களை மிகவும் நொந்து கொள்கின்றனர். "மாணியை மகிழ்வித்த இவரே மாபுருடர்; அற்புதர்; பற்பல கலைவல்ல பாவலர்; வைராக்ய நிதி; குணக் குன்று" என்று பாராட்டுகின்றனர். அஸூயை அவர்களை விட்டு அகல்கின்றது. சேமநிதியைப் பெறுகின்றனர். ஸ்வாமி ஸந்துஷ்டராகிறார். 'அனைத்தும் பரிமுகனின் லீலை' என்கின்றனர் அன்பர்கள்.

இதனை, மத்தியார்ச்சுனம் அநந்த பாரதியார் தாமியற்றிய வேதாந்த தேசிக வைபவப் பிரகாசிகைக் கீர்த்தனையில் பின் வருமாறு அமைத்துள்ளார்.

தரு - இராக - சாவேரி - தாளம் ஆதி.

பல்லவி

சாமி யெங்கள் கருணாநிதி — குருசாந்த — வேதாந்த நிதியிவர் தாமே (சாமி)

அநுபல்லவி

பூமி புகழுங் கச்சிப் பேரருளாளர் பாதப்
பூங்கமலம் பரவும் வேங்கட நாதகுரு (சாமி)

சரணங்கள்

1. அந்தநாள் பிரமசாரி யொருத்தன் வந்து
அங்கங்கே தனவான்க ளாரென் றெங்கும் விசாரித்
தெந்தன் கலியாணத்துக்கே யெவர்கள் சொன்னங்கள் வாரித்
தந்திடுவா ரென்றானே தந்ததிவர் சொன்ன மாரி (சாமி)

2. இது தருணத்தி னல்ல தனவா னிவரென்று
இவர் திருமாளிகையைக் காட்டியே சிலர் செல்ல
அது நிசமா மென்றெண்ணி யவனு மிவர்பாற் செல்ல
மதுர மிகுந்த கவி மாரி பொழிய வல்ல (சாமி)

3. பரிவா யனுக்கிரகித்த பாகவதர்கள் சொற்ற
படியே பெருமாள் கிருபை பண்ணுவா ரென்றுமெத்த
பெரிய பிராட்டியார்மேல் சீர்த்துதி யென்றுவைத்த
வரிசை யதினாற் சொன்னம் வாரிவாரிக் கொடுத்த (சாமி)

ஶ்ரியை நம:

உலகப் போக்கு

[ஸ்ரீ. உப. V. ஸ்ரீநிவாஸையங்கார், பனஸ்வாடி பங்களா, கோரேகான், பம்பாய்.]

ஜகத்தில் ஏதாவது ஒரு விஷயத்தை நாம் அறியவேண்டுமானல் அதற்கு ப்ரத்யக்ஷம் அநுமாநம் ஆகமம் இம்மூன்றுமே முக்ய ஸாதநங்களாகும்.

வேதம் அபௌருஷேயமா?

முதலில் ப்ரத்யக்ஷத்தால் இந்த்ரியங்களுக்குக் கோசரமாக உள்ளவைகளை முற்றுமே யறியமுடியு மாதலாலும், இந்த்ரியங்களுக்கு எட்டாத பல் விஷயங்கள் உண்டென்றும், அப்படிப் பட்ட விஷயங்களை அறிய இந்த்ரியங்கள் உபயோகப்படாததால் ப்ரத்யக்ஷம் முற்றிலும் ப்ரமாணம் என்கிற பக்ஷம் ஒப்புக்கொள்ளப்படவில்லை.

அநுமாநத்கால் அப்ரத்யக்ஷமாக உள்ள விஷயங்கள்கூட அறியப்படுவதால், அநுமாநம் ப்ரமாணமோ வென்ருல் இல்லை. ஏனெனில்: இன்று பல காரணங்களால் அநுமாநத்தைக் கொண்டு, ஒரு விஷயம் உண்மையென்று சொன்ஞல், காலவிசேஷத்தில் மிகவும் புத்தியில், உயர்ந்தவர்களால் மேல் கொண்டு காரணங்கள் சொல்லி அநுமாநத்தால் ஏற்பட்ட முடிவு மாற்றப் படுகிறது. உதாரணமாக ஈன்ஸ்டின் என்பவரால் அநுமாநத்தால் முடிவு செய்யப்பட்ட விஷயம் (Einsten's Theory) பிற்பட்டு வந்தவர்களால் மாற்றப் பட்டது. நவிந விஜ்ஞாந ஶாஸ்த்ரிகளால் அநுமாநத்தால் ஸ்தாபிதம் செய்யப்படும் விஷயம் வெகு சீக்ரத்தில் மேற்பட்ட மேதாவிகளால் சொல்லப் படும் அநுமாந காரணங்களால் மாற்றப்படுகிறது. ஆனதால் அநுமாநமும் ப்ரமாண மல்ல.

மூன்ருவதாக: ஆகமம் அல்லது சப்தம் என்பது ப்ரமாண.மென்ரேம். சப்த மென்பது இங்கு வேதம்தான். இது அப்ரத்யக்ஷங்களையும் ஸம்ஶய மறத் தெரிவிப்பதால்தான் இது ப்ரமாணமாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீ பாஷ்யகாரரும் '[illegible]' என்று அடிக்கடி பாஷ்யத்தில் ஸாதித் தருள்வ துண்டு.

அப்படிப்பட்ட வேதம் அப்ரத்யக்ஷமான மோக்ஷாதிகளை ஸம்ஶய மறச் சொல்வதிஞல், அது நித்யமாயும் அபௌருஷேயமாகவும்தான் இருக்க வேண்டும். அநித்யமானதும் பௌருஷேயமானதுமான எழுத்துக்கள், நித்ய மான மோக்ஷம் முதலியவற்றை ஸம்ஶய மறச் சொல்ல முடியாது. இப்படி வேதம் அபௌருஷேய மென்பதைப் பாஹ்ய மதத்தைச் சேர்ந்தவர்களும் கீழ் வரும் காரணத்தால் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்.

முக்யமாக எந்த மதமானலும் அது ஸ்தாபநம் செய்யப்படவேண்டிய தற்கு 'ஸ்வபக்ஷ ரக்ஷணம், பரபக்ஷ நிராகரணம்' இரண்டும் அடிடைப்படை.

ஸ்வபக்ஷ ரக்ஷணமாவது: தான் ஸ்தாபிக்கவேண்டிய கக்ஷிக்குள்ள வாதங்களைப் பலமாகச் சொல்லி அதை ரக்ஷிப்பது. பரபக்ஷ நிராகரணம் என்பது, இதைத் தவிர மற்ற மதங்களை நிராஸிப்பது. ப்ரஹ்ம ஸூத்ரங்களில் இரண்டாவது அத்யாயம் அவிரோதாத்யாய மென்றும், இரண்டாவது அத்யாயம் இரண்டாம் பாதம் விரோதி நிரஸநபாத மென்றும் சொல்லப்படும். இதன் மூலம் வேத ப்ரமாணத்தால் ஸ்தாபிக்கப்பட்ட மதத்துக்கு விரோதமாக வுள்ள மதங்களை நிராஸம் செய்து வைதிக மதத்தை ஏகதேசமாக ஸ்தாபிக்க வேதமே மூலப் பொருளாவதால், இந்த வேதத்தில் சொல்லும் விஷயங்க ளெல்லாம் பரம உபாதேயமாயும் மறுக்க முடியாதபடி பாஹ்யர்களால் கூட ஒப்புக்கொள்ளவேண்டியதாயு மாயிற்று. எந்த இடத்திலாவது ஸ்ம்ருதிக்கும் வேதத்துக்கும் விரோதம் வருமாகில், 'விரொயெகுவெக்ஷூம் ஸ்யாக்' என்கிற ப்ரகாரம் ஸ்ம்ருதியை விலக்கி வேதம் தான் ப்ரமாணமாகும். அப்படிப்பட்ட வேதம் எந்த இடத்திலாவது 'இதைச் செய்; இதைச் செய்யாதே' என்று விதித்துச் சொல்லுமாகில், நம் புத்திக்கு எட்டும் மற்றவைகளெல்லாம் பெரும்பாலும் வேதத்தாலேயே ருஜுப்பிக்கப்பட்டதால் நம் புத்திக் கெட்டாத விஷயங்களைச் சொல்லுமவற்றையும் உண்மையாக நம்பி அப்படியே எடுத்துக்கொள்ளவேண்டியது தான். இந்த ந்யாயம் மேனுட்டாராலும் கூட ஒப்புக்கொள்ளப்பட்டதே. ஆனதால் அந்த வேதம் நைமித்திக ப்ரளயத்திற்குப் பிறகு ஸ்ருஷ்டியைச் சொல்லும்போது,

'வெஜெந ரூவம் வ்யாகரொக் ப்ரஜாவதிः', 'ஸ ஹூரிதி வ்யாஹரக் ஸ ஹூமிமஸ்ருஜக் ஸ ஹுவஊதிவ்யாஹரக் ஸொஂதரிக்ஷமஸ்ருஜத' என்று ச்ருதியாலும், 'ஸவெஷாஞ்ச ஸ நாமாநி கமாணி ச வ்ருதக்ருதக். வெஜஶப்பெஹ்யஎவாமென வ்ருதக்ஸம்ஸ்தாஶ்வ நிமமெ'

என்று விஷ்ணுபுராணுதிகள் மூலமும், சதுர்முக ப்ரஹ்மா உலகை ஸ்ருஷ்டிக்குங்கால் வேதத்தை உருப் போட்டுக்கொண்டு, எப்படி ஒரு குயவன் ஒரு குடம் செய்ய வேண்டியதாயிருந்தால் முன்புள்ள குடத்தின் ஆகாரத்தை மநஸ்ஸில் வைத்துக்கொண்டு செய்வானே, அப்படியே ப்ரஹ்மாவும் ப்ரளயத்துக்கு முன் உலக ஸ்ருஷ்டி எப்படி இருந்ததோ அப்படியே செய்கிறுர் என்று தெரிய வருகிறது.

ஆனல் சதுர்முக ப்ரஹ்மா உட்பட நஷ்டமாகிவிடும் ப்ராக்ருத ப்ரளயத்தில் வேத முட்பட நஷ்டமாவதால், எப்படி வேதத்துக்கு நித்யத்வம் சொல்லப்படலா மென்கிற கேள்வி எழலாம். அப்படி மஹா பூதங்கள் உட்பட நஷ்டமாகி எல்லாம் ஸூக்ஷ்மமாகப் பரமாத்மாவில் லயமாகி யிருக்கும்காலத்தில் பகவான் 'தடைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயெய' என்று ஸங்கல்பித்துக் கொண்டு, முதலில் மஹதாதி ப்ரஹ்மாண்டத்தை ஸ்ருஷ்டித்து, அதில் 'யொப்ரஹ்மாணம் விதயாதி வூவஂம் யொ வெவெதாம்ஶ்ச ப்ரஹிணாதி தஸ்மை' என்று வேதத்தில் சொன்னபடி, பகவான் சதுர்முக ப்ரஹ்மாவைப் பிறகு ஸ்ருஷ்டித்து அவருக்கு வேதத்தை உபதேசித்து ப்ரஹ்மாவைக் கொண்டே முன்

முன் யுகங்களி லுள்ளபடி தேவாதிகளை ஸ்ருஷ்டிக்கச் செய்து தானும் எல்லாவற்றிற்கும் அந்தர்யாமியாக இருந்துகொள்கிறான்.

இப்படி ஸூக்ஷ்மாவஸ்தையிலிருந்து மஹாதாதி ப்ரஹ்மாண்டத்தையும், அதில் சதுர்முக ப்ரஹ்மாவையும் பகவான் ச்ருதி பூர்வமாக ஸ்ருஷ்டிக்கிறானென்று தெரிவதால், வேதம் அபௌருஷேயம். வேத மார்க்கம் தவிர மற்ற மதங்களெல்லாம் எந்த வேதவாக்ய ப்ரமாணத்தால் நிராஸம் செய்யப்பட்டதோ, அந்த வேதம் ஸ்ருஷ்டி க்ரமத்தைச் சொல்வதால் இதை மேனாட்டு வேதாந்திகள் கூட ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று.

*　　*　　*　　*

மனிதர்களுக்குள் வேற்றுமை உண்டா ?

தற்காலத்தில் மேனாட்டுக் கல்விப் பெருக்காலும், நம் நாட்டுப் பழக்க வழக்கங்களிலுள்ள ஔதாஸீந்யத்தாலும், அஜ்ஞதையாலும், நம் நாட்டுக்கேற்ற அநேக பழக்க வழக்கங்களிலும் ஸமூஹ அமைப்பிலும் பல விதமான தோஷங்கள் சொல்லி அவற்றைத் தகர்க்கவேண்டும் மென்று அநேக சீர்திருத்தக்காரர்களும் பாஹ்ய மத ப்ரசாரகர்களும் முன் வந்திருக்கிறார்கள். அதில் அவர்கள் எதிர்ப்பிற்கு முக்யமாக அகப்பட்ட விஷயம் ஜாதிப் பிரிவினை. அவர்கள் சொல்லும் கக்ஷி என்னவென்றால்: ஈச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட மனிதர்களில் வித்யாஸ மிருக்க முடியா தென்றும், உயர்ந்த ஜாதியர்கள் தாழ்ந்தவர்களைத் தலை தூக்க விடாமல் வைத்திருப்பதே ஜாதிப் பிரிவினையின் நோக்க மென்றும் பலவாறாகச் சொல்கிறார்கள். 'ஈச்வர ஸ்ருஷ்டியில் ஒரே வர்க்கத்தைச் சேர்ந்த வஸ்துக்களில் வேற்றுமை யுண்டா ?' என்பது ஆழ்ந்து கவனிக்கப்படத்தக்க விஷயம்.

பூமியில் ஒரே இடத்தில் பச்சைப் பசேரென்று முளைத்திருக்கும் புல்லை ஒரு பசுமாடு மேய்ந்துகொண்டு வருங்காலத்தில், சில இடத்தில் செழுமையாக முளைத்திருக்கும் அதே வகையான புல்லை அந்தப் பசு மேயாமல் முகர்ந்து பார்த்துவிட்டு ஒதுக்கி விடுகிறது. இதற்குக் காரணம் என்ன ? புல் என்கிற விஷயத்தில் எல்லாப் புல்லும் ஒரே வர்க்கம் ஒரே இனம் தான். அதில் வேற்றுமை யில்லை. ஆனால் அதன் உத்பத்தி ஸ்தானம் தோஷப்பட்டிருப்பதை ஒட்டி அந்தப் பசு மேற்படி புல்லை மேய்வதில்லை. அமேத்யத்தில் முளைத்த புல்லைப் பசுமாடு மேயாது. நம் கண்ணுக்கு இந்தப் பாகுபாடு தெரியாவிடினும், பகவானுடைய அநுக்ரஹத்தால் பசு அதை அறிந்து விடுகிறது. அதுபோலவே அவரவர்கள் உத்பத்தி ஸ்தானத்துக்குத் தக்கபடி ஸத்வ ரஜ தமோகுணங்கள் ஏற்படுவதால், அந்தந்தக் குணங்களோடு கூடியவர்களை அந்தந்த வர்ணமாக நம் தீர்க்க த்ருஷ்டியுள்ள பெரியோர்கள்,

'𑌚𑌾𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌮𑌯𑌾 𑌸𑍃𑌷𑍍𑌟𑌂 𑌗𑍁𑌣𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌭𑌾𑌗𑌶𑌃'

என்று பாகுபடுத்தியிருக்கிறார்கள். அந்தந்த ஜாதிக்குத் தக்கப்படி ஆஹார நியமம் ஸத்வோத்கர்ஷத்தை யுத்தேசித்து,

'𑌆𑌹𑌾𑌰𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌸𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑌤𑍍𑌵𑌶𑍁𑌦𑍍𑌧𑍌 𑌧𑍍𑌰𑍁𑌵𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃'

என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப் பாகுபாடு செய்வது இயற்கைக் குணத்தை யநுஸரித்தே யன்றி இயற்கைக்கு விரோத மன்று. அதேமாதிரி இயற்கைக் காரணத்தோடு செயற்கைக் காரணங்களும் சில மனிதர்களிடம் ஏற்படலாம். எப்படி ஒரே இடத்தில் ஒரே மாதிரியான விதை போட்டு முளைத்த பீர்க்கங்கொடியில் உண்டாகும் காய் அது உண்டான காலத்தில் எவ வித தோஷமில்லாதிருந்தாலும், காலக்ரமத்தில் அந்தக் கொடி மனிதர்கள் காலால் மிதிபட்டால் தோஷப்பட்டுக் காய் கசக்க ஆரம்பிக்குமோ, அப்படியே மனிதனுக்கும் உற்பத்தி தோஷ மில்லாவிடினும் காலக்ரமத்தில் செயற்கை தோஷங்கள் பல ஏற்படலாம்.

இங்கு நம் ஜாதி மதத்தில் தோஷம் சொல்லும் மேனாட்டார், தம் நாட்டில் ஏன் முதலாளி தொழிலாளி என்றும், ஒரே கண்டமான ஐரோப்பாவில் ரஷ்யாக்காரன், ஜர்மனிக்காரன், ப்ரெஞ்சுக்காரன், ப்ரிடிஷ்கார னென்கிற பல விதமான பிரிவினையுடன் பரஸ்பரம் அடித்துக்கொள்ளவேணும்? எல்லா வற்றுக்கும் காரணம், நவீந காலத்தவர்கள் தங்கள் அஜ்ஞதையையும் நம் பெரியவர்களின் ஸர்வஜ்ஞத்வத்தையும் அறியாமல் தங்கள் புத்திக்குத் தோன்றிய படி கட்டுப்பாடில்லாமல் போவதுமே யன்றி வேறல்ல.

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸர்வஜித்ஸூ மாசி (கும்ப) மீ

13—2—48	1உ	வெள்ளிக்கிழமை	...	அதிதி
14—2—48	2உ	சனிக்கிழமை	...	கும்ப சுக்ல சதுர்த்தி திதி
15—2—48	3உ	ஞாயிற்றுக்கிழமை	...	கும்ப சுக்ல பஞ்சமி திதி
16—2—48	4உ	திங்கட்கிழமை	...	கும்ப சுக்ல ஷஷ்டி திதி
17—2—48	5உ	செவ்வாய்க்கிழமை	...	கும்ப சுக்ல ஸப்தமி அஷ்டமி திதி த்வயம்
18—2—48	6உ	புதன்கிழமை	...	கும்ப சுக்ல நவமி திதி
21—2—48	9உ	சனிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி ; ஸ்ரீ குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம்
22—2—48	10உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸ்ரீ. அ மடம் 37-ம் பட்டம், பிள்ளைபாக்கம் ஸ்ரீ வீரராகவ ஶடகோப யதீந்த்ர மஹா தேஶிகன் திருநக்ஷத்ரம்
24—2—48	12உ	செவ்வாய்க்கிழமை	...	பௌர்ணமி : மாசி மகம்
28—2—48	16உ	சனிக்கிழமை	...	கும்ப க்ருஷ்ண சதுர்த்தி திதி
29—2—48	17உ	ஞாயிற்றுக்கிழமை	...	,, பஞ்சமி திதி
1—3—48	18உ	திங்கட்கிழமை	...	,, ஷஷ்டி திதி
2—3—48	19உ	செவ்வாய்க்கிழமை	...	,, ஸப்தமி திதி
3—3—48	20உ	புதன்கிழமை	...	,, அஷ்டமி திதி [அஷ்டகா ச்ராத்தம்]
4—3—48	21உ	வியாழக்கிழமை	...	,, நவமி திதி [அந்வஷ்டகா ச்ராத்தம்]
6—3—48	23உ	சனிக்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
7—3—48	24உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸர்வ ச்ரவண த்வாதசி
10—3—48	27உ	புதன்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை
13—3—48	30உ	சனிக்கிழமை	...	கும்ப சுக்ல த்ருதீயை திதி. மீன ரவி 35, 29. [மீன ஸங்க்ரமண தர்ப்பணம்]

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ கல்யாணுபிவர்த்திநீ ஸபா, மதுராந்தகம்.

ஷை ஸபையானது, 28-11-47 வெள்ளிக்கிழமை யன்று, இந்த ஸபையின் ஸ்தாபகரும், இக் கலாசாலையின் முதல் ப்ரின்ஸிபாலாக எழுந்தருளி யிருந்தவருமான ஸ்ரீ. உப. கோஷ்டீபுரம் ஸ்வாமியின் அவதார திருமஹோத்ஸவத்தைக் கொண்டாட, வ்யாகரணுத்யாபகர் ஸ்ரீ. உப. P. N. ராகவாசார்ய ஸ்வாமியின் அக்ராஸநத்தின் கீழ்க் கூடிற்று. அப்போது ந்யாயாத்யாபகர் வேதாந்த வாவதூக ஸ்ரீ. உப. நாராயணுசார்ய ஸ்வாமி "ஆசார்ய மஹிமா" என்னும் விஷயத்தை விரிவாக உபந்யஸித்தார். ஸபாத்யக்ஷரும், ஆசார்யருடைய மஹிமையைப் பற்றியும் ஸ்வாமியின் குணுதிசயங்களைப் பற்றியும் பாராட்டிப் பேசினுர்.

பின்னர் ஷை ஸபை 5-12-47 வெள்ளிக்கிழமை மாலை 3-30 மணிக்கு, வ்யாகரணுத்யாபகர் ஸ்ரீ. உப. M. S. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ஆத்யக்ஷ்யததில் கூடிற்று. அப்போது P. R. வெங்கட வரதனுல் "வித்யா" என்னும் விஷயம்பற்றி ஒரு ஸம்ஸ்க்ருத வ்யாஸம் வாசிக்கப்பட்டது.

12-12-47 வெள்ளிக்கிழமை ஷை ஸபை ந்யாயாத்யாபகர் வேதாந்த வாவதூக ஸ்ரீ. உப. நாராயணுசார்ய ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தில் கூடிற்று. அப்போது P. K. ராமபத்ரன் என்பவனுல் "மாத்ரு பூமி" என்னும் விஷயம் பற்றி ஒரு ஸம்ஸ்க்ருத வ்யாஸம் படிக்கப்பட்டது.

14-12-47 அன்று இரவு 8-மணிக்கு, ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ ஸந்நிதி ஆராதகர் வித்வான் குரிச்சி ஸ்ரீ. உப. ராமபத்ராசார்ய ஸ்வாமி "ஸநாதந தர்மம்" என்னும் விஷயத்தை உபந்யஸித்தார். அப்போது ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீ கார்யம் ஸ்வாமியும், கலாசாலை அத்யக்ஷ ஸ்வாமியும், மற்றும் அத்யாபக ஸ்வாமிகளும் எழுந்தருளி யிருந்தனர்.

15-12-47 அன்று காலை 9-மணிக்கு, இக்கலாசாலையில், முன்பு ஆத்யக்ஷ ஸ்தாநத்தை வஹித்தவரும், திருப்பதி காலேஜில் ப்ரதாந வ்யாகரணுத்யாபகருமான பூர்வாப்திக ரத்ந ஸ்ரீ. உப. சேட்லூர் ராகவாசார்ய ஸ்வாமிக்கு, ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீ கார்யம் ஸ்வாமி ஆத்யக்ஷ்யத்தின் கீழ் ஸ்வாகத பத்ரிகை ஒன்று படித்துக் கொடுக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீ. உப. ராகவாசார்ய ஸ்வாமி, "ஆத்ம குணம்" என்னும் விஷயத்தைப் பற்றி உபந்யஸித்தார். அங்கு எழுந்தருளியிருந்த அத்யாபகர்கள், ஷை ஸ்வாமியினுடைய குணுதிசயங்களையும் அந்த ஸ்வாமியால் ஏற்பட்ட நன்மைகளையும் பற்றிப் பரக்கக் கூறினர்.

இந்த ஸபையானது 19-12-47 சனிக்கிழமை மாலை 4-மணிக்கு, ஸ்ரீ. உப. மீமாம்ஸாத்யாபகர் ஸ்ரீ. உப. S. கோபாலாசார்ய ஸ்வாமியின் ஆத்யக்ஷ்யத்தின் கீழ், ஸ்ரீ அஹோபில மடம் 41-ம் பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தைக் கொண்டாடுவதற்காகக் கூடிற்று. அப்போது அத்யக்ஷ ஸ்வாமி "ஆசார்ய குணுநுஸந்தாநம்" என்னும் விஷயத்தை உபந்யஸித்தார். அப்போது அங்கு ஸந்நிஹிதர்களாயிருந்த அத்யாபகர்களும் ஆசார்ய விஷயமாக உபந்யாஸம் செய்தார்கள். கார்யதர்சி அங்குக் குழுமி யிருந்தோர் யாவர்க்கும் வந்தநோபசாரம் கூறினுர். பின்னர் ஸபையிலுள்ளார்க்குத் தாம்பூலாதிகள் வழங்கப்பட்டு மங்களத்துடன் ஸபை இனிது முடிந்தது.

ஸ்ரீரங்கம் உபந்யாஸங்கள்

ஸ்ரீ அஹோபில மடம் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய நியமனத்தினால். நிகழும் ஸர்வஜித்ஸு கார்த்திகைமீ 30உ முதல் ஏழு நாட்கள் ஸ்ரீரங்கம் ஸ்ரீ அஹோபில மடத்தில், ஸ்ரீ மடத்து ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ. உ.வே. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் ப்ரதி தினம் மாலை 4-மணி முதல் 5-30 மணி வரையில் கீழ்க் கண்டபடி உபந்யாஸங்கள் செய்யப்பட்டன.

முதல் இரண்டு நாட்கள் :–"வைதிக மதமான ஹிந்து மதத்தின் பூர்வ கால ஸ்திதியும் தத்கால ஸ்திதியும்." 3-4 தினங்களில் :–"ஹிந்து மத ஶாஸ்த்ரங்கள் நான்காவது வர்ணத்தார்க்கு மிகுந்த அநுகூலத்தையும், முதல் வர்ணத்தாருக்கு ச்ரம ஸாத்யமான அநுஷ்டானங்களையே வ்யக்தமாகச் சொல்லுகின்றன" என்பது. 5-வது நாள் .—"தத்காலத்து நாகரிகர்கள் ஜாதி பேதங்களை விட்டு விட வேணுமென்றும், எல்லா மனிதர்களும் ஒரே ஜாதியாக ஆகவேணுமென்றும், அதற்கு ப்ரமாணமாக 'வித்யாவிநய ஸம்பந்நே' என்னும் ச்லோகத்தை மேற்கோளாகக் காட்டி ஷை விஷயத்தை ஸ்தாபிக்க முயல்வது பிசகென்றும், அந்த வாக்யத்துக்கு அது அர்த்தமல்லவென்றும் நிரூபித்தல்." 6-வது நாள் :–"பொது ஜனங்களுக்கு நாஸ்திக்யம் குறைந்து ஆஸ்திக்யம் வ்ருத்தியடைய வேண்டுமென்பதை "ஈஶாவாஸ்யமிதம் ஸர்வம்" என்கிற உபநிஷத் வாக்யத்தைக் கொண்டு விவரணம் செய்தல்." 7-வது நாள் :–"தயை"

இந்த உபந்யாஸங்களுக்கு அநேக ஆஸ்திக ப்ரபுக்களும் வைதிக ஸ்ரீ வைஷ்ணவர்களும், இதர மதஸ்தர்களும், ஸ்த்ரீகளும், சதுர்த்தர்களும் வந்திருந்து அவற்றைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தார்கள். கடைசீ தினத்தில் ஸ்ரீ. உ.வே. R. நாராயணையங்கார், ஸ்ரீ உ.வே. M. B. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் முதலியோர், தாங்கள் இந்த உபந்யாஸங்களைக் கேட்டு ஸந்தோஷிக்கும்படி ஸ்ரீ அழகிய சிங்கர் தமது ஆஸ்தாந வித்வானைக் கொண்டு உபந்யாஸங்களைச் செய்வித்ததற்காக ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் தங்களுடைய க்ருதஜ்ஞதாவிஷ்கரண ரூபமாக ப்ரணம பரம்பரைகளை ஸமர்ப்பித்ததாகச் சொன்னதோடு, இதற்கு மேலும் இத்தகைய உபந்யாஸங்களை நடத்திவரவேண்டுமென்று ஸ்ரீ புத்தங் கோட்டகம் ஸ்வாமியைக் கேட்டுக் கொண்டார்கள். ஸ்ரீ ஸ்வாமியும் ப்ரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலையில் ஸ்ரீ மடத்தில் உபந்யாஸம் பண்ணுவதாகத் திருவுள்ளம் பற்றியிருக்கிறார்.

S. ராகவையங்கார்.

* * * *

பண்ணுருட்டி ஸ்ரீ மஹாராதநம்

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ அழகியசிங்கருடைய 25-வது வார்ஷிக மஹாராதந மஹோத்ஸவத்தைப் பண்ணுருட்டி அக்ரஹாரத்தில் 3–2–48 செவ்வாய்க்கிழமை உபக்ரமித்து, 7–2–48 சனிக்கிழமை (சாத்துமறை) வரை 5-நாட்கள் ஒரு வெள்ளி விழாக் கொண்டாட்டமாக நடத்த உத்தேசித்திருக்கிறபடியால், ஸ்வாமிகள் எழுந்தருளி அம்மஹோத்ஸவத்தைச் சிறப்புடன் நடத்தி வைக்குமாறு ப்ரார்த்திக்கிறேன்.

பார்த்தஸாரதி தாஸன்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் க்ருபையை முன்னிட்டு ஸ்ரீமதழகிய சிங்கரால் நடத்தப்பட்டு வரும் நமது 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' பத்ரிகை இது பர்யந்தம் நிர்விக்நமாய் நடந்துவந்து, 1947 டிஸெம்பர் மாஸத்துடன் அதன் ஆருவது ஆண்டு பூர்த்தி யாயிற்று. இப்பத்ரிகை நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பரதாயப் பத்ரிகைகளுள் சிறந்து விளங்குவதற்கு, விஷய தாநம் செய்துவரும் வித்வான்களுடைய ஆதரவும் சந்தாதாரர்களுடைய ஆதரவுமே முக்ய காரணமாகும். ப்ரதிப்ரயோஜந நிரபேக்ஷர்களாய் ச்ரமத்தைப் பொருட் படுத்தாது விஷய தாநம் செய்துவரும் அம்மஹநீயர்களுக்கு எமது க்ருதஜ்ஞதையை ஆவிஷ்கரித்துக் கொள்ளுகிறோம். அரிய க்ரந்த விமர்சங்களும் தத்வ விசாரங்களும் அடங்கியுள்ள இத்தகைய ஸம்ப்ரதாயப் பத்ரிகை ஒன்றை ஸ்ரீமதழகிய சிங்கர் மிகுந்த அபிநிவேசத்துடன் நடத்திவருவது ஸ்ரீ வைஷ்ணவ உலகிற்கு ஒரு பெருமையை அளிப்பதோடு, ஸ்ரீமதழகிய சிங்கரின் நிருபம நிருபாதிக ஔதார்யத்துக்கும் ஒரு நிதர்சந மாகும். இப்பத்ரிகை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் கடாக்ஷத்தாலும் ஸ்ரீ அழகிய சிங்கரின் அநுக்ரஹத்தாலும் உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாகிப் பல்லாண்டுகளாய்த் தழைத்து ஓங்கவேண்டு மென்று ஸ்ரீ சரண்யனை ப்ரார்த்திக்கின்றோம். இப்பத்ரிகையை ஆதரித்துவரும் சந்தாதாரர்களுள், சென்ற வர்ஷத்து (1947) சந்தாவைச் செலுத்தாதிருக்கும் ஸுஹ்ருத்துக்கள், அதனைக் கூடிய சீக்ரம் செலுத்தும்படி அவர்களை ஸவிநயம் ப்ராத்திக்கிறோம்.

* * * *

ஒரு விண்ணப்பம்

உபாதாநோபாதேயங்களின் ஸம்பந்தத்தைப்பற்றி ஸ்ரீ உபநிஷத் பாஷ்யகாரர் அநுக்ரஹித்துள்ள லக்ஷண விஷயமாக அடியேன் செய்து கொண்டிருந்த விண்ணப்பத்திற்கு ஸ்ரீ. உப. வித்வான் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி ஒரு ஸமாதாநப் பத்ரிகை அனுப்பியிருந்தார். அது சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் ப்ரசுரமாயிருக்கிறது. இப்போது அதன் விவரணமாக மற்றுமொரு ஸ்ரீ முகத்தை அந்த ஸ்வாமி நியமித்திருக்கிறார். அதை இந்த ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்வதற்கு ஸஞ்சிகையில் இடமில்லை. அடுத்துவரும் ஸஞ்சிகையில் அது வெளிவரும். விளம்பத்தை அந்த ஸ்வாமி க்ஷமித்தருளவேணு மென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வாஸந்திகா பரிணயம்

[ஸ்ரீமதி. மா. ராஜலக்ஷ்மி அம்மாள், பஸவன்குடி, பெங்களூர்.]

வேண்டிற்றெல்லாம் தரும் வள்ளல்— மணிவண்ணன்— அவ்வச்சுதன், ஆச்ரிதர்கள் ஏககாலத்தில் நான்கு புருஷார்த்தங்களையும் விரும்பி வேண்டின் அக்ஷணமே அருளவேண்டு மல்லவா? சற்றுத் தாமதித்தால் அவர்கள் மற்றைத் தெய்வங்களை நாடிச் சென்றால் என்ன செய்வது? அப்போது தன் உதாரகுணம் ஓடியல்லவோ ஒளியவேண்டும் என்று சிந்தித்தான் போலும். ஆகவே அவன் ஒருமிக்க சதுர்வித புருஷார்த்தங்களையும் வாரி வழங்கும் பொருட்டு நான்கு திருக்கைகளுடன் ஸேவைஸாதித் தருளுகிறான்.

அவைகளுள் அழகிய இரண்டு திருத்தோள்களை சங்கு சக்ரங்கள் ஸதா அலங்கரித்திருப்பது ஸுப்ரஸித்தம். மேலும் திருமாலைப் பளிங்குபோல் விளக்கிக் காட்டும் அஸாதாரண சிந்நங்கள் அல்லவோ அத்தங்யர்கள்? அவர்கள் திவ்யாயுதங்களில் மேன்மை பொருந்தியவர்கள். திவ்யாபரண கோஷ்டியிலோ பகவானுக்குப் பரமாநந்த மூட்டும் பக்தமணிகள். வலது காத்தில், 'எப்பொழுது பெருமாள் கடாக்ஷத் திவலைகள் நம் மேல் வீசும்? எதிரிகள்மேல் பாய்ந்து அவர்களை எப்போது உரு மாய்ந்துபோகுமாறு செய்வோம்?' என்று ஸதா சுழன்று ஜ்வலிக்கும் திருவாழியாழ்வான். இடது காத்திலோ, 'நமது முறை எப்போது வாய்க்கும்? பகவான் திருப்பவளச் செவ்வாயின் அமுதத்தை எப் பொழுது உண்போம்? ஆச்ரித விரோதிகளின் உள்ளம் கலங்கி நடுங்குமாறு செய்யும் கைங்கர்யம் எப்பொழுது நேரிடும்?' என்று சிந்தித்துத் திகழும் ஸ்ரீ பாஞ்ஜந்யாழ்வான். இவர்கள் சேர்த்தியின் அழகில் ஈடுபட்டல்லவோ ஆழ்வார்

"வடிவார் சோதிவ லத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமு ழங்குமப் பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே"

என்று மங்களாசாஸநம் செய்தருளினர். இவ்வித வைப்வம் வாய்ந்த சங்கு சக்ரங்களை ஸதா தரிக்கும் பாக்யம் பெற்ற இரு திருத்தோள்களின் பெருமையையும் புகழையும் பற்றிக் கூறவும் வேண்டுமோ? அவைகளுக்கு, பகவானை ஸதா தாங்கிநிற்கும் அநந்தனையும் கருடனையும்காட்டில், பாகவதோத்தமர்களாகிய திருவாழி திருச்சங்குகளைத் தாங்கிநிற்கும் பரம பாக்யம் கிட்டியதே என்னும் பெருமையும் கர்வமும் சற்றுத் தலையெடுத்தன. அவ்வளவுதான். அதன் பயன் என்னவாகியது? மற்ற இருகரங்கள் அருகில் வரவும் அவை ஸம்மதிக்கவில்லை. 'எங்களுக்கே உரியது இக்கைங்கர்யம்; உங்களுக்கு இதில் ஒரு திவலை யளவும் கிட்டாது; அதற்கென்ன செய்வது? இது நாங்கள் செய்த பெருந்தவம்' என்று சொல்வதுபோல் அவ்வுந்நத ஸ்தாநத்திலிருந்து

உதாஸீநமாய் அவ்விரு கரங்களேயும் கீழே தள்ளிவிட்டன போலும். ஆஹா! என்ன பரிதாபம்! தாங்கவொண்ணுத இவ்வவமாநத்தை அத்திருக்கரங்கள் ஙனம் ஸஹிக்கும்? தங்களுக்கு அவ்வித பாகவத கைங்கர்யம் கிட்டவில்லேயே என்னும் ஏக்கம் ஒருபக்கம். அவர்களின் பெருமையைக் கண்டு பொருமையும் துக்கமும் ஒரு பக்கம். இவ்வத்ருஷ்டம் கிட்டும் உபாயம் எவ்விதம் என்னும் சிந்தனே வேறு. இத்தகைய பெரும்புயலில் அகப்பட்டுக் கரையேற வழியறியாமல் கலங்கித் தவித்தனர்.

என்ன ஆச்சர்யம்! நடுக் கடலில் நீந்திக் கைசோர்ந்தவனுக்கு யத்ருச்சையாய் ஒரு மரக்கலம் தோன்றியதுபோல், அத்தருணம் அவைகளின் உள்ளத்தில் பளிச்செனச் சிறந்த ஓர் உபாயம் தோன்றியது. "என்ன! இவர்கள் பெருந்தவம் செய்தனராம். நம்மால் இவர்களேப்போல் தவம் புரிவது அஸாத்யமென்று எண்ணினர்போலும்! நமது அன்னேயின் கடாக்ஷத்தின் ஒரு திவலேயாலன்ரே வாணீபதி பசுபதி சசீபதி என்னும் பட்டங்களே அவரவர் அடைகின்றனர். இதோ இறுமாந்து நம்மைக் கீழே தள்ளிய இருவர்க்கும் ஶாச்வதமாகிய இப்பதவி கிடைத்திருப்பது தாயின் கடாக்ஷத்தாலன்ரே? அதை யறியாமல் ஏனே துள்ளுகின்றனர்? இருக்கட்டும் அவர்கள் பெருமை. இப்பொழுது நாமும் அன்னேயை அடிபணிந்து ஆச்ரயித்து, ஶாச்வதமாகிய கைங்கர்ய லக்ஷ்மியைப் பெறுவோம் என்று எண்ணினர்கள். ஆகவே அக்ஷணமே திருப்பாற்கடலின் அருமைச் செல்வி— அழகுக் கடல்— ஸ்ரீ மஹா லக்ஷ்மியின் சக்ரத்தை நிகர்த்த திருமார்பை ஒரு கரமும், சங்கத்தைப் பழிக்கும் அவள் திருக்கழுத்தை மற்ருெரு கரமுமாக ஆச்ரயித்து ஆலிங்கநம் செய்துகொண்டன. அப்போது அவைகள் அநுபவித்த ஆநந்தமும் ஸௌக்யமும் பெருமையும் அபரிமிதம். இவ்விதம் திருமாமகளே அணேத்துத் தழுவும் அவஸரத்தில் நான்கு திருக்கைகளுடன் விளங்கும் ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹன் திவ்ய ஸேவை அத்யத்புதம். காணக் கோடிக் கண்கள்தான் போதுமோ? இத்தகைய மங்கள தேவதையாகிற அழகிய சிங்கப்பிரான் மூவுலகங்களுக்கும் ஸகல மங்களங்களேயும் அருளிக் காப்பாற்றக் கடவன்.

இரண்டாவது ச்லோகம்:—கழுத்துக்குமேல் குதிரை முகத்துடன் அவதரித்த பகவான் ஸ்ரீ ஹயக்ரீவன் ஸகல கலேகளுக்கும் அதிதேவதை. அவருடைய 'ஹலஹல' த்வநியானது இதற்கு முன்னில்லாத ஓர் அபூர்வ பாஷை; ஒருவராலும் செய்யப்படாத வேத ஒலி. அதைச் செவியுற்றவளவில் பசி பிணி மூப்புத் துன்பம் முதலிய தாபங்கள் இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடும். கர்ப்பவாஸாதி துக்கங்கள் நம்மை ஒருக்காலும் அணுகா. அத்தகைய மஹிமை வாய்ந்த ஸ்ரீ ஹயக்ரீவ மூர்த்தியானவர் பரம க்ருபையுடன் ஒருக்காலும் மறக்காத ஞான மென்னும் பெரும் புதையலே அடியேனுக்கு அருளக்கடவர்.

ஸூத்ரதாரன்:—[திரையின் பக்கம் நோக்கி] அப்பா! மாரிஷா! சற்று இப்பக்கம் வருவாயா? முக்யமான ஒரு விஷயம்; மற்ற வேலேகள் இருக்கட்டும். முதலில் இதைக் கவனி.

நடன்:—[அரங்கத்தின் முன் தோன்றி] அண்ணா! அடியேன் இதோ ஸித்தமா யிருக்கிறேன். என்ன முக்ய விஷயமோ? கட்டளைக்குக் காத்திருக் கிறேன்.

ஸூத்ர:—மாரிஷா! நமது அஹோபிலத்தில் நித்யவாஸம் செய்யும் ஸ்ரீ அழகிய சிங்கரின் ப்ரபாவம் அபரிமிதம் என்பதை நீ அறியாயா? ப்ரதி தினம் தேவேந்த்ரன் முக்காலமும் தவறாமல் வந்து தன் தலை தரையில் பட வல்லவோ வணங்கி வழிபடுகின்றான். அவன் கிரீடத்தில் விலை மதிப் பற்று ஜ்வலிக்கும் நவரத்னங்களின் காந்தி பகவானுடைய திருவடித் தாமரைக ளில் பரவிப் பற்பல சித்ர வர்ணங்களாய் ப்ரகாசிப்பதை நீ ஸேவித்த தில்லையா? அத்தகைய ப்ரபாவம் பொருந்திய நமது லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கு இப்பொழுது வஸந்தோத்ஸவம் அல்லவா? அம்மஹோத்ஸவத்தைக் கண்களார ஸேவிக்கும் பொருட்டு நானா தேசங்களிலிருந்தும் பாகவதோத்தமர்கள் திரள்திரளாய் வந்து கூடியிருக்கின்றனர். அவர்கள் இப்பொழுது நம்மை ஒரு பொருளாக மதித்து நாடகம் நடிக்குமாறு ஆஜ்ஞாபிக்கின்றனர்.

மாரிஷன்:—அண்ணா! அது என்ன ஆஜ்ஞையோ? அடியேன் அறிய லாகுமோ? எந்த நாடகம் நடிக்குமாறு பெரியோர்கள் இட்ட கட்டளை?

ஸூத்ர:—அப்பா! அதற்குள் இவ்வளவு அவஸரமா? அவ்விஷயத்தைக் கூறுவதற்காகவே யல்லவோ இப்பொழுது உன்னை அழைத்தேன். நான் புகல்வது இருக்கட்டும்; நீயே சற்று ஊஹித்துப் பார். பரம பாகவதர்கள் எதை விரும்புவர்கள்? சாகுந்தலத்தையும் ரத்நாவளியையுமா நடிக்குமாறு கட்டளை யிடுவர்? எம்பெருமான் திவ்ய லீலைக ளல்லவோ அவர்களுக்குத் தேனும் பாலும் கன்னலும் அமுதமுமாகத் தித்திக்கும். சொல்லுகிறேன் கேள். ஸ்ரீ அஹோ பிலேசன் திவ்ய லீலைகளை நிரூபிக்கும் நாடகம் ஒன்று உண்டு. அது நவ ரஸங்களுள் முதன்மைபெற்று ச்ருங்கார ரஸம் ததும்புவது. இப்பொழுது நமக்குப் புதிதாய்க் கிடைத்திருக்கும் பொக்கிஷம் இது. இத்தகைய திவ்ய நாடகத்தைக் கண்டு களிக்க விரும்புகின்றனர்.

நடன்:—[சற்று ஆலோசித்து] அண்ணா! இவ்ருத்தாந்தத்தைக் கேட்டு எனது நெஞ்சம், சிந்தை யென்னும் ஊஞ்சலில் ஏறி இங்கு மங்கும் நின்ற விடத்தில் நில்லாமல் ஆடுகிறது. ஞானிகளாகிய பரமேகாந்திகள் நமது நாட கத்தைக் காண விரும்புவதே அபூர்வம். அவ்வித மிருக்க: அவர்கள் கட்டளையை நாம் தாமதிக்காமல் அவச்யம் நிறைவேற்றவேண்டியது நம் கடமை. ஆனால் நாம் தனித்தனியாய் நாடக பாத்ரங்களை ஒத்திகை நடத்தவு மில்லை. தவிர: நாட கத்திற்கு வேண்டிய ஸாமக்ரியைகளும் சரிவர ஒன்றும் நம் வசத்தி லில்லை. இவைகளெல்லாம் ஒருபுற மிருக்கட்டும். எவ்விதமோ ஸமாளித்துக் கொள்ள லாம். முக்யமாய் நமது நடகேஸரி [நரகேஸரி] கொஞ்ச காலமாய் ஊரிலில்லை. நாயகனின்றி நாடகம் எவ்விதம் சோபிக்கும்? மேலும் ஊரில் ஒரு வதந்தி உலாவு கிறது. அவன் ஒருநாள் வேட்டையாடக் கானகம் சென்றானாம். இது வஸந்த

கால மல்லவா ? பூத்துச் சொரியும் உத்யாந வநம்; போதாக் குறைக்கு மந்த மாருதம்; மன்மதன் பாடு கொண்டாட்டம்தான். அவ்விடம் யாரோ அழகிய ஒரு பெண் இங்கு மங்கும் உலாவிக்கொண்டிருந்தாளாம். அவளைக் கண்டதுதான் தாமதம். நமது கதாநாயகன் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தான்; அப்பெண்மணிமேல் தீரா மோஹங் கொண்டான். இப்பொழுது அவளை அடையும் ப்ரயத்நத்தில் முயன்றிருப்பதாகக் கேள்வி. அவன் கார்யம் முடிந்தல்லவோ பிறகு அவன் நமது நாடகத் தலைவனாக நடிப்பான்.

ஸூத்ர:—அடாடா! இவ்வளவு ஸமாசாரம் அறிந்த உன் காதில், மேல் நடந்த வ்ருத்தாந்தம் விழாம லிருப்பது ஆச்சர்யம். இது நாடெங்கும் ஒரு அதிசயக் கதையாக வல்லவோ முழங்குகின்றது? நமது நடகேஸரி என்ன ஸமாந்யமா? அவன் ஸகல தந்த்ரங்களையும் கசடறக் கற்றவ னல்லவா ? எவ்விதமோ அவ்வநிதையை வஸீகரித்துத் தன் வலையில் விழுமாறு செய்துவிட்டான். அத்துடனில்லை; இப்பொழுது அவளைக் கல்யாணம் செய்து, கூட அழைத்துக் கொண்டு மல்லவோ வந்துவிட்டான்! அவன் ஸாமர்த்யமும் சாதுர்யமும் எவருக்கு உண்டு ? இனி நமக்கென்ன குறை ? நாடகம் நடிப்பதற்குத்தான் என்ன ஆக்ஷேபணை?

நடன் :—[ஸந்தோஷத்துடன்] அடாடா ! என்ன ஆச்சர்யம் ! என்ன ஆச்சர்யம் ! காதலுக்குக் கண்ணில்லை என்பது திண்ணம். குணத்தைப் பற்றிச் சற்றும் எண்ணுவதில்லை. ஜாதியைப்பற்றி முதலே லக்ஷ்யம் செய்வதில்லை. குலத்தைப்பற்றிச் சிந்தையில்லை. கோத்ரத்தைப்பற்றியோ ஆராய்ச்சியே வேண்டாம். போகட்டும். மற்ற நடை உடை பாவனைகளில் பெண் தனக்குத் தகுதியுடையவள்ா என்பதையும் ஆலோசிப்பதில்லை. அறவே காணவேண்டியது தான். ஒருவர் உள்ளத்தை ஒருவர் கொள்ளை கொண்டு விடுகின்றனர். அன்பு வலையில் கட்டுண்டு வெளிவர இயலாமல் விழிக்கின்றனர். உலக இயற்கையில் இதுவும் ஒரு விசித்ரம்.

ஸூத்ர:—ஆம்; அதற்கென்ன ஸந்தேஹம்? முற்றிலும் உண்மை. உலக நாடக மவ்வித மிருக்கட்டும். தத்ஸமயம் நடிக்கவேண்டிய நாடகத்தைப் பற்றிக் கவனிப்போம். ஆசார்ய கடாக்ஷத்தினால் நாடக பாத்ரங்கள் ஸாமக்ரியைகள் ஸகலமும் ஸித்தமாகிவிட்டன வல்லவா ? ஆகவே கீதம், வாத்யம், நாட்யம் ஒன்றும் குறைவின்றி அத்யத்புதமாய் நாடகத்தை நடிக்கவேண்டும். சீக்ரம் ஆரம்பிக்கக் கடவாய். பக்தமணிகளைக் காக்கவைப்பது மஹாபசாரம்.

நடன்:-[சற்று ஆலோசித்து] என்ன பெரியோர்க ளிட்ட ஆஜ்ஞை? இதற்கு முன் ஒருவராலும் அபிநயிக்கப்படாத நவீந நாடகம். நரஹரியின் கல்யாண குணங்கள் நிறைந்து பரிமளம் வீசுவது. ரஸம், பாவம், நடை முதலியவைகள், ஸ்வல்பமும் பழுதின்றி ப்ரகாசிப்பது. இச்சந்தர்ப்பற் கேற்ப பகவல்லீலைகள் ததும்புவது. அத்தகைய திவ்ய நாடகத்தை யல்லவா விரும்புகிறீர்கள்.?

ஸூத்ர:—[சற்றுச் சிந்தித்து] அத்தகைய குணங்கள் பொருந்திய ரூபகம் எது?—ஆம்; இப்பொழுது நினைவு வந்தது. அரவிந்தலோசநனது அத்புத லீலைகளற்ற நாடகமும் ஒரு நாடகமோ? கருங்கடலில் கணக்கற்ற சங்கங்கள் உள்ளன. அவை யனைத்தும் எம்பெருமான் கர கமலத்தில் விளங்கும் பாஞ்சஜந்யத்தின் பெருமைக்கு ஓர் அணுவளவு தான் ஈடாகுமோ? நமது கையில் அத்தகைய பகவத் கதை என்னும் பரமாந்ந மிருக்கப் பசித்திருப்பதேன்?

நல்ல காலம்; பகவத் க்ருபை; இப்பொழுது ஞாபகம் வந்ததே. இதோ பரம பாகவதோத்தமர்களால் சூழப்பட்டிருக்கும் இதே அஹோபில புரியில் யதிகுல திலகர் ஒருவர் எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் என்னும் திருநாமம் அவரை அலங்கரித்துப் பெருமை பெற்றது. அவர் பெருமை அபரிதம். 'ஸகல சாஸ்த்ர பாரங்கதராகிய வ்யாஸ பகவானே மறுபடியும் அவதரித்தாரோ? அல்லது ஞான வைராக்ய நிதியாகிய மற்றொரு சுக ப்ரஹ்ம ரிஷியோ? இல்லையேல், புண்யவான்களுக்குள் முதன்மை பெற்ற புண்டரீக முனியே மறுபடியும் தோன்றினரோ? அல்லது பாகவதோத்தமர்களுள் ப்ரஸித்தியுடைய இரண்டாவது ப்ரஹ்லாதாழ்வானோ?' என்று திகைக்கும் வண்ணம் அவர் விளங்கினர். அவர் மஹிமையும் பெருமையும் பாரெங்கிலும் பரவின. அச்செய்தியை அத்ருஷ்ட சாலிகளாகிய அநேக அரசர்கள் அறிந்தனர். அவர்கள் ஸ்வாமியை ஆச்ரயித்துச் சரணாகதி செய்து அவர் கருணைக்குப் பாத்ரர்க ளாயினர். அதன் பயனாக அவர்கள் அஷ்டாக்ஷர மஹாமந்த்ரோபதேசம் பெற்றுத் தந்யர்க ளாயினர். ஆசார்ய திவ்ய கடாக்ஷ அலைகளின் திவலைகள் பரவியவர்களின் பாக்யத்தைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? ஆகவே அம்மன்னர்களிடம் அஷ்ட லக்ஷ்மியும் தாண்டவ மாடினர். ஐஹிக போகங்கள் ஸமஸ்தங்களையும் அநுபவித்தனர். அவர்களுடைய கீர்த்தி எட்டுத் திக்கிலும் கொடி கட்டிப் பறந்தது. இம்மஹானின் அத்புத சரிதம் அறியாதவர் எவர்? நீ கேள்விப்பட்ட தில்லையா என்ன?

நடன்:—ஓஹோ! அம்மஹான் இவர் தானோ! அவர் பெரும் புகழ் செவிக்கெட்டாத தேசம்தான் ஏது? ப்ரஹ்மசர்ய ஆச்ரமத்தி லிருக்கும் பொழுதே ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்தவ ரல்லவா இவர்? அதிபால்ய வயதிலேயே அணுவளவும் பிறழாமல் அவ்ரதத்தை ஆசரித்தவ ரன்றோ? ஞானம் பக்தி வைராக்யம் விவேகம் முதலிய ஆத்மகுணங்கள் அவரை யடைந்து பெரும் புகழ் பெற்றன. மேலும் இன்னுமோர் அத்யாச்சர்ய விஷயம். ஸ்வாமி அவதரித்தது, தமிழ் மொழி நடமாடாத கர்நாடக தேசம்; ஆனால் இம்மஹா தேசிகனே தமிழ்வேத மாகிற அமுத வெள்ளத்தில் உல்லாஸமாய் நீந்திக் களித்தவர். பகவத் விஷயம் காலக்ஷேபம் ஸாதிக்கும் ஸாமர்த்யமும் சாதுர்யமும் அத்யத்புதம். கேட்பவர்கள் மலர்ந்த கண் இமைக்காமல் திறந்த வாய் மூடாமல் சித்திரப் பதுமையென சமைந்து வீற்றிருப்பர். இவருக்கு நிகர் இவரேயன்றி வேறில்லை. இவர் சடகோப முனிவரின் குலப் பெருமையை

யும் தர்மநத்தையும் பழுதின்றிப் பாதுகாத்த பரம நிபுணர். ஐம்புலன்களும் அவருக்கு ஸ்வாதீநப். அரும் பெருந் தவம் புரிந்தவர். இம்மஹானின் கல்யாண குணங்களைக் கண்டு ஸ்ரீலக்ஷ்மி ந்ருஸிம்ஹனது திருவுள்ளம் பொங்கிப் பூரித்தது. பகவத் க்ருபைக்குப் பாத்ரமாகிய பிறகு எது தான் துர்லபம்? எப்பெருமான் அவரை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை நிலை நாட்டிய எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளுக்கு ஸார்வ பௌமனுய் மூர்த்தாபிஷேகம் செய் வித்தருளினர் என்னும் புகழ் மாலையால் அலங்கரிக்கப்பட்ட யதிராஜ ரன்றே இவர்? பூர்வம் இவ்வாசார்யன் திருவடித் தாமரைகளின் தூள்களைக் கோடிக் கணக்கான ஜனங்கள் ஆச்ரயித்துத் தந்ய ராயினர். பாகவத பாததூளிக் கிருக்கும் மஹிமை எண்ணி லடங்குமோ? ஆசார்யன் திருவடித் தூள்களின் ப்ரபாவத்தால் அவர்கள் காமம் க்ரோதம் மோஹம் லோபம் மதம் மாத்ஸர்யம் என்னும் அடங்காப் பேய்களை அடக்கி ஆண்டனர். விஷயங்களின் ஆசை யாகிய அடவியை வேருடன் அழித்தனர். அத்தகைய ப்ரபாவம் வாய்ந்த அம் மஹானின் பதகமல தூள்களின் ஒரு ரேணுவின் பொருட்டு எனது அநந்த ப்ரணமங்கள்.

ஸூத்ர:—பின்னும் நான் இவ்வாசார்ய பரம்பரையைக் கூறுகிறேன்; சற்றுக் கவனிப்பாயாக. இவருக்கு அடுத்த பட்டம் ஸ்ரீமந் நாராயண முனிவர். மூன்ருவது பட்டம் ஸ்ரீ பராங்குஶ முனிவர். அவருக்குப் பிறகு ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன். ஐந்தாவது பட்டம் ஸ்ரீ ஶடகோப மஹா தேசிகன். அவருக்கடுத்து ஆருவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த பராங்குஶ மஹா முனிவரின் ப்ரபாவம் ஸுப்ரஸித்தம் அம்மஹானின் திவ்ய சரித மென்னும் அமுதத்தில் ஒரு திவலை யளவு பருகிக் களிப்போம்.

இவ்வாசார்யனும் ஸ்ரீமதஹோபில மடம் முதல் பட்டத்தில் மூர்த்தா பிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹா தேசிகனைப் போலவே திக்விஜயம் செய்து ஸமய வாதிகளைக் கண்டித்தருளினர். அதற்கு இது ஓர் உதாஹரணம். முன்னொரு ஸமயம் இம்முனிவர் உத்தர தேச யாத்ரை எழுந்தருளினர். ஒரு திவ்ய நகரத்தின் மார்க்கமாகச் செல்லுமளவில், அவ்வூர் அரசன் முகுந்ததேவராயன் என்பவன் ஸகல மர்யாதைகளுடன் ஓடிவந்து ஸ்வாமியை எதிர்கொண் டழைத்தான். அவன் ஸத்வ குணசீலன்; ஆஸ்திக சிகாமணி. ஸ்வாமியின் ப்ரபாவங்களைப் பலர் மூலமாகக் கேள்வியுற்ருன். ஆகவே, வெகு காலமாய் அவரை ஸேவிக்க ஆவல் கொண்டான். தனது பாக்யம் பழுத்தது என அவனது உள்ளமும் உடலும் பூரித்தன. அக்ஷணமே அவ்வழகியசிங்கரின் திருவடித்தாமரைகளை ஆச்ரயித்தான். ஆசார்ய தேவனைத் திவ்யப் பல்லக்கில் எழுந்தருளச் செய்து தன் தோளின்மேல் சுமந்து தந்யனு னன். சிறந்த யானை, குதிரை, ரத்நப் பல்லக்கு, இரட்டைக் குடை, இரட்டைச் சாமரம் முதலிய விருதுகளை வழங்கினுன். ஆசார்யன் அப்பரிகரங்கள் புடை சூழ வெகு ஸம்ப்ரமமாய், தமது ஆசார்யன் ஸ்ரீ ஆதிவண்சடகோப மஹா தேசிகனே மறுபடியும் உத்ஸவம் கண்டருளுகிருரோ என்னும்படி எழுந்தருளி னர். பிறகு ஸ்ரீ புருஷோத்தமம் என்னும் திவ்யதேசத்தை யடைந்து அவ்

விடம் பற்பல ப்ரபல வாதிகளை வெகு ஸாமர்த்யமாய் வென்றார். அதன் பயன் கூறத் தரமன்று. ஸ்ரீமத் ராமாநுஜ ஸித்தாந்த விஜயத்வஜம் வேரூன்றி நின்றது. கோடிக் கணக்கான அடியார்களைப் பகவத் க்ருபைக்குப் பாத்ரமாகுமாறு செய்தருளினர் ஸ்வாமி. அவ்விடமிருந்து ஜயசாலியாய்க் கர்நாடக ராஜ்யத்தை உய்விக்க எழுந்தருளினார். அத்தேசத்தில் மஹத்தான வித்வத் ஸபை கூடியது. 'தர்க்கத்தில் புலி—வ்யாகரணத்தில் ஸிம்ஹம்' என்று பட்டம் பெற்ற பண்டிதர்கள் ஸ்வாமியை வாதத்திற்கு அழைத்தனர். குமிழியிட்டுக் கொந்தளித்து வரும் ப்ரவாஹம்போல், அவர்கள் வாக்ப்ரவாஹம் மஹான்மேல் அலைமோதிப் பாய்ந்தது. என்ன ஆயிற்று? அடுத்த க்ஷணமே காட்டாற்று வெள்ளம் கட்டாந்தரையாக மாறுவதுபோல், அவர்கள் கற்ற கல்வியெல்லாம் பயனற்று ஓய்ந்து நின்றனர். ஸ்வாமியோ விஜயஶாலியாப் பத்துத் திக்கிலும் கொடி கட்டிப் பறக்கும் கீர்த்தியுடன் விளங்கினார். அப்போது எதிரி கோஷ்டியின் தலைவர் ஸ்வாமியின் பெருமையைப் புகழ்ந்து பாடினர்.

ஸந்யாஸாச்ரமத்திற் குரிய அநுஷ்டாநங்களை ஆச்ரயிப்பதில் இவர் முதன்மை ஸ்தாநம் வஹித்தவர். வ்யாகரணம் முதலிய சாஸ்த்ரங்களில் வல்லவர் ஆதிசேஷ னல்லவா? இம்மஹான் அவருக்கு இரண்டாவது பதவியை ஏற்றவர். ஜ்ஞாநம் பக்தி பாண்டித்யம் முதலியவைகளில் ப்ரஸித்தி பெற்றவர்கள், தேவகுரு ப்ருஹஸ்பதி அஸுரகுரு சுக்ராசாரியர் என இருவர்களைக் கூறுவர். அவர்களுக் கடுத்த மூன்றாவது பதவியை ஏற்றவர் நமது ஸ்வாமி. ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாக்கள் முறையே ப்ரஹ்மா விஷ்ணு சிவன் மும்மூர்த்திக ளல்லவா? ஈச்வரத் தன்மையில் இவர்களுக் கிணையாக நான்காவதாக வைத்து எண்ணத்தக்கவர் எவரெனில், இப்பராங்குஶ முனிவரே யாவர். இம்மஹானிடமிருந்து ஸந்யாஸாச்ரம பதவியைப் பெற்ற சிஷ்யர் ஸ்ரீ சடகோப மஹா தேசிகன். இவருடைய மஹிமையும் பெருமையும் அபரிமிதம். சந்த்ரனைக் கண்ட ஸாகரம் மேன்மேலும் விருத்தி யடையும். சாஸ்த்ரக் கடலிலிருந்து ஞான மென்னும் அமுதத்தைக் கடைந்தெடுத்தார். அவ்வமுதக் கிரணங்களால் இப்பாமர உலகில் அஜ்ஞாந இருளை அடியோடு போக்கடித்து, எங்கும் ஞானவொளி பரவுமாறு செய்தருளினர். வேரூன்றிய பக்தியினாலும் ஆழ்ந்த த்யாநத்தினாலும் ஸ்ரீ ஹயக்ரீவ மூர்த்தியை அத்யாச்சர்யமாய் ஆராதித்தார். அவ்வெம்பெருமானின் அளவற்ற அநுக்ரஹத்தினால் ஸகல கலா வல்லவராய் விளங்கினார். அம்மஹானின் பாண்டித்யத்தைப்பற்றி உலகம் எவ்விதம் புகழ்ந்து பாடுகின்ற தென்பதைச் சற்றுக் கேள்.

பட்டமதம், குருமதம், மிச்ரமதம், ப்ரபாகரமதம் என்னும் நான்கு பிரிவுகளையுடையது மீமாம்ஸ மதம். அம்மதத்தின் கொள்கைகளை நிலைநிற்க வொட்டாமல் அவற்றை அவலீலையாய் அட்டஹாஸம் செய்து சிதற வடிக்கும் ஸிம்ஹம், வ்யாகரண ஶாஸ்த்ரத்தைச் செய்தருளியவர் பகவான் அநந்தன். அச் சாஸ்த்ரத்தை இவ்வுலகில் பழுதின்றிப் பரவச்செய்த அத்ருஷ்ட தேவதை. தர்க்க சாஸ்த்ரத்திலோ கரைகண்ட மேதாவி. அத்யந்தம் சாதுர்யமாய் வாதி

களை வென்று உண்மைப்பொருளை நிலைநாட்டும் ஜீவநாடி. ஸாங்க்ய மதத்தைச் சிதற வடித்து ஸ்ரீமத் ராமாநுஜ ஸித்தாந்தத்தை ஸதாபிப்பதில் பழுத்த பழம். தர்ம ஶாஸ்த்ரங்களின் ரஹஸ்யார்த்தங்களை யறிந்த பரம நிபுணர். இதோடு உபய வேதாந்தத்திற்கும் பரமாசார்யன். வேதத்தின் சட்டத்தை வழுவாமல் ஆசரிக்குமாறு செய்யும் திறமை வாய்ந்த ஆசார்யன். இவ்விதம் ஸர்வ ஶாஸ்த்ரங்களும் தமக்கு ஸ்வாதீநமான ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகனையும் ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரராகிய நமது தேசிகனையும் போலவே ஜயசாலியாக விளங்குகிருர்.

நடன்:—ஆம்; ஸ்வாமியின் சரிதம் அத்யாச்சர்யம்தான். ஒரு ஸந்தேஹம்; அதை அறியவேண்டும் என்னும் குதூஹலம் உண்டு. அதாவது: மற்ரெரு அதிசய விஷயம் உலகத்தில் உலாவிவருகிறதே. ஆருவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த பராங்குஶமுனிவர் தாம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருயிருக்கும்பொழுதே ஒரு சிஷ்யனை அங்கீகரித்து அடிக்கடி தம்முடன் கூட ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஆராதநத்தின்பொருட்டு நியமித்தருளினராமே. அது என்ன காரணம்?

ஸூத்ர:—என்ன! இவ்வளவு அறிந்த நீ அம்மஹானுடைய இவ்வத்புத சரிதத்தை அறியாயா? இதுவும் உலக ப்ரஸித்த மாயிற்றே. கூறுகிறேன்; கவநமாய்க் கேள். "ஒரு ஸமயம் தாமரைக் கண்ணனுகிய லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் பராங்குஶ முனிவரின் ஸ்வப்நத்தில் தோன்றிப் பின்வருமாறு கட்டளையிட்டருளினர்.

நடன்:— இது என்ன ஆச்சர்யம்! பகவான் இட்ட கட்டளைதான் என்ன? சற்று விவரமாய்க் கூறவேண்டுகிறேன்.

ஸூத்ர:— ஆம்; இது அனைவரும் அறியவேண்டிய அத்புத சரிதம் தான். கூறுகிறேன்; சற்றுக் கவனமாய்க் கேள். துண்டீர மண்டலத்தின் சிகரம் போன்றது 'இளங்காடு' என்னும் அக்ரஹாரம். அவ்வூர், ஞானம் பக்தி வைராக்யம் முதலிய ஆத்ம குணங்கள் மிக்க அநேக ஸ்ரீவைஷ்ணவர்களால் அலங்கரிக்கப்பட்டது. அவ்வக்ரஹாரத்தில் வைஷ்ணவகுல திலகர் ஒருவர் பாரத்வாஜ கோத்ரத்தில் அவதரித்தார். அவர் திருவநந்தாசாரியர் என்னும் திருநாமம் பூண்டு, மிகவும் ப்ரஸித்தியுடன் விளங்கினர். அவருடைய ப்ரபௌத்ரன்; ஸ்ரீ ஸுந்தராசாரியர் என்னும் வித்வத் சிரோமணியின் பௌத்ரன்; பரம பாகவதோத்தமராகிய ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்யருடைய குலத்தை விளக்க வந்துதித்த புத்ர சிகாமணி. இம்மஹான் அதி பால்யத்திலேயே அதிகாலையில் மலர்ந்த தாமரைப் புஷ்பங்களிலிருந்து பெருகும் அம்ருத தாரையை யொக்கும் தேன் மொழியினல் உலகை உய்வித்து மிகவும் கீர்த்தியுடன் விளங்கினர். இத்தகைய மஹிமை வாய்ந்த அம்மஹானை வரவழைத்து எனது ஆராதநத்தின்பொருட்டு நியமிக்கக் கடவாய் என்பதுதான் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஆஜ்ஞை."

நடன்:—[அத்யந்தம் குதூஹலத்துடன்] பிறகு அவர் என்ன செய்தார்? எத்தகைய அத்புத ஸம்பவம் நடந்தது?

189242

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் '47 டிஸெம்பர் மாஸத்துச் சந்தா வரவு

				ரூ.	அ.
5	ஸ்ரீ	V. R. நாராயணையங்கார், பஸவன்குடி		3	0
14	,,	N. S. சாரி, பம்பாய்	....	3	0
19	,,	R. S. சாரி, மாதுங்கா, பம்பாய்	....	6	0
20	,,	S. ராமஸ்வாமி, வி. டி. பம்பாய்	...	3	0
77	,,	K. வீரராகவையங்கார், வாங்கல்	...	3	0
148	,,	P. S. வெங்கடாசாரி, திருப்பத்தூர், (ராமநாதபுரம்)		3	0
222	,,	K. குப்புஸாமி ஐயங்கார், ஆடுதுறை	...	3	0
274	,,	M. சடகோபாசாரியர், ஓரகடம்	...	3	0
277	,,	நூனிலையாளர், பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்		3	0
280	,,	தீக்ஷிதர் நாராயணாசார்யர், தில்லஸ்தாநம்	...	3	0
347	,,	M. ஸ்ரீநிவாஸாசார்யர், சின்ன காஞ்சீபுரம்	...	6	0
389	,,	R. வீராஸாமி ஐயங்கார், தில்லஸ்தாநம்	...	3	0
390	,,	P. K. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், திண்டிவனம்	...	3	0
475	,,	சேட்லூர். ஸ்ரீநிவாஸராகவாசார்யர், தூசி	...	3	0
504	,,	கோஸகாசார்யர், திருப்பத்தூர், ராமநாதபுரம்	...	3	0
556	,,	K. V. ஸந்தாந கோபாலாசார்யர், கத்வால்	...	1	8
644	,,	சக்ரவர்த்தி. ராஜம்மாள் அவலூர்	...	1	8
708	,,	N. பார்த்தஸாரதி, மயிலாப்பூர்	...	3	0
734	,,	R. S. ராகவாசார்யர், தென் கோபால ஸமுத்ரம், மன்னார்குடி	...	3	0
794	,,	M. கோபாலன், புவநகிரி	...	3	0
	,,	T. துரைஸாமி ஐயங்கார், ஓலக்கூர்	...	1	8
		ஆக வரவு ரூ.		64	8

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ	மற்றவர்கட்கு. ரூ. அ.
1. ஸ்ரீ அதிகரண[illegible]ராவளி ([illegible] லிபி) [illegible], கலபதகு [illegible]க்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2. உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12	1—0
3. உக்தி நிஷ்டாபரணோத்யோதம் "	0—8	0-12
4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி)	... 1—0	1—8
5. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	... 0—8	0-12
6. ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8. ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் [illegible]ழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8

(தபால் செலவு வேறு)

[illegible]ண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்.

நெ. 22, மஹாலக்ஷ்மி தெரு, தியாகராய நகர், [illegible]

என்னும் விலாஸத்திற்கு எழுதி[illegible] பெற்றுச்[illegible]

d b[illegible]